

ஆண், பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தலும், தவிர்த்தலுக்குமான சுகாதார சேவையாளரின் பொறுப்புகள் கடமைகள் பற்றி, பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தலுக்கான கைநூல்

FHB

European Union

PSL

ஆண், பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தலும், தவிர்த்தலுக்குமான சுகாதார சேவையாளரின் பொறுப்புகள் கடமைகள் பற்றி, பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தலுக்கான கைநூல்

පෙරවදන

ජාතික අවශ්‍යතා ලෙස කලින් කලට මතුවන සෞඛ්‍යමය ප්‍රස්තකයන්ට විසඳුම් සෙවීම පවුල් සෞඛ්‍ය කාර්යාංශයට ආගන්තුක වූවක් නොවේ, එදා මෙරට මාතෘ හා ළමා සෞඛ්‍යය නංවා ලීමට, පළමු පියවර එසවූ අප එතැන් සිට පවුල් සැලසුම, මව් කිරි දීම ප්‍රවර්ධනය, පාසැල් සෞඛ්‍යය, සුවනාරී සෞඛ්‍යය, පවුලේ පෝෂණය, නව යෞවනයන්ගේ සෞඛ්‍යය ආදී අංශ ගණනාවක් වෙත සාර්ථකව යොමුවූයේ ක්ෂේත්‍ර සෞඛ්‍ය කාර්ය මණ්ඩල වෙතින් ලද නොපැකිල සහාය නිසාය. ඉතා මෑතකදී නවක විවාහක යුවලගේ සෞඛ්‍යය හා විදෙස් රැකියාවල නියැලි කාන්තාවන්ගේ සෞඛ්‍යය ආදී ක්ෂේත්‍ර වෙතද අප අවතීරණා වෙමින් සිටින්නෙමු.

ස්ත්‍රී පුරුෂ සමාජභාවය පදනම් කරගත් හිංසනයද මෙරට තුල මතුවෙමින් පවත්නා සෞඛ්‍යය ගැටළුවක් ලෙස සෞඛ්‍යය අමාත්‍යංශය පිළිගැනීමත් සමඟම පවුල් සෞඛ්‍ය කාර්යාංශය මේ පිළිබඳව වඩාත් වගකීමකින් කටයුතු ආරම්භ කෙරුනේ, එමඟින් පවුලේ සෞඛයට ඇති කරන අහිතකර බලපෑම් මැඩලීම සඳහායි. ස්ත්‍රී පුරුෂ සමාජභාවය පදනම් කරගත් හිංසනය ජාතික සහ ප්‍රජා මට්ටමින් තබා දැක්විය හැකි මැදිහත් වීමක් පවතිද යන්න පවා එකල සැකයට භාජනය වූවකි.

එහෙත් පවුලේ ගෞරවය, දරුවන්ගේ අනාගතය, සමාජ අපකීර්තිය ආදී විවිධ තිමිර පටළ වලින් වැසී තිබූ මෙම ගැටළුව දැන් ක්‍රමක් ක්‍රමයෙන් විනිවිදව මතුවෙමින් පවතී. එපමණක් නොව විශේෂයෙන් පවුල තුල පවත්නා හිංසාකාරී පරිසරය හොඳින්ම අවබෝධ කරගැනීමට මෙන්ම ඒ සඳහා රහස්‍ය හා විශ්වාසදායී ලෙස ප්‍රතිචාර දැක්වීමට සහ ප්‍රතිකාර ලබාදීමට සමත් සමීපතම කණ්ඩායම ක්ෂේත්‍ර සෞඛ්‍ය කාර්ය මණ්ඩල බවට පිළිගැනීමක් ඇත.

ඉහත කර්තව්‍යය සඳහා සෞඛ්‍ය කාර්ය මණ්ඩලය දැනුවත් කිරීම පිණිස පුහුණුකරුවන් උදෙසා පිළියෙල වුනු මෙම මාර්ගෝපදේශය සකස් කිරීම සඳහා කාලය, දැනුම හා ශ්‍රමය කැප කරමින් සහාය වූ සැමට අපගේ හෘර්දයාංගම කෘතඥතාවය පිළිගැන්වීමට මෙය අවස්ථාවක් කරගනිමු

ප්‍රජා වෛද්‍ය විශේෂඥ
වෛද්‍ය නෙත්තාංජලි මාපිටිගම
කාන්තා සෞඛ්‍ය පිළිබඳ
ජාතික වැඩසටහන් කළමනාකාරිණි
පවුල් සෞඛ්‍ය කාර්යාංශය

ප්‍රජා වෛද්‍ය විශේෂඥ
වෛද්‍ය දීප්ති පෙරේරා
අධ්‍යක්ෂ - මාතෘ හා ළමා සෞඛ්‍ය
පවුල් සෞඛ්‍ය කාර්යාංශය

பொருளடக்கம்

ஆண் பெண் சமூகநிலை 01

ஆண்களின் பிரசன்னமும் பங்களிப்பும் 20

பெண் ஆண் சமூகநிலை, சுகாரத்தினும்,
இனப்பெருக்க சுகாதாரத்தினும் ஏற்படுத்தும்
அழுத்தியாலம் 27

ஆண் பெண் சமூகநிலையினை அடிப்படையாகக்
கொண்ட இம்சைகளைக் குறைத்தலும் தலிர்த்தலும் 41

ஆண் பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தலும் தவிர்த்தலும்

1. தலைப்பு - ஆண் பெண் சமூகநிலை (Gender)

2. காலம் - 6 மணித்தியாலம்

3. அடிப்படை
   - ஆண் பெண் பால்நிலையும், ஆண் பெண் சமூகநிலையும்.
   - ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான கருத்துரை.
   - ஆண் பெண் சமூகநிலை அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தம்.
   - ஆண் பெண் சமூகநிலை நீதி மற்றும் நியாயங்களின் மேல் ஏற்படுத்தும் அழுத்தம்.

4. எதிர்பார்க்கப்படும் நிபுணத்துவம் - ஆண் பெண் சமூகநிலை குறித்த அறிவையும் மனப்பாங்கையும் ஏற்படுத்திக் கொள்வர். ஆண் பெண் சமூகநிலை பற்றி பயிற்சியாளர் அவசியமான திறமையைப் பெற்றுக் கொள்வர்.

5. விசேட குறிக்கோள் / கற்றல் குறிக்கோள் (படிமுறைகள்)

   1. ஆண் பெண் பால்நிலை மற்றும் ஆண் பெண் சமூகநிலைக்கு இடையேயான வித்தியாசத்தை விளக்கும்.

   2. ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான அடிப்படை அறிகுறிகள் / பொதுக் கருத்துக்களை அடையாளம் காண்பர்.

   3. ஆண் பெண் சமூகநிலை அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தத்தினை அடையாளம் காண்பர்.

   4. ஆண் பெண் சமூகநிலை நீதி மற்றும் நியாயங்களின் மேல் ஏற்படுத்தும் அழுத்தத்தினைக் குறைப்பதற்கான சுகாதார சேவையாளரது கடமையினை விளக்கும்.

6. கற்பித்தல் மற்றும் கற்றல் உபகரணங்கள்

- ஊடுகாட்டி (OHP) மற்றும் ஊடுகாட்டித் தாள்
- மெகி பலகை / பேனா
- டிமைஸ் தாள் / பிளாட்டிக்னம்
- தயாரிக்கப்பட்ட மட்டைகள்
- பிளிப் அட்டவணை
- பங்குபற்றுவோருக்கான பென்சில்கள்

7. கற்பிக்கும் முறை

- கூட்டு அறிவுக் கலப்பு (Brain Storming) பங்குபற்றல் முறை, மற்றும் சிறு குழுக் கலந்துரையாடல்.

8. பிரவேசம்

- பங்குபற்றுவோருக்கு இந்த விடயத்தின் முக்கியத்துவம் பற்றித் தெளிவுபடுத்தவும்.

➢ அது சம்பந்தமாக தற்போதைக்குக் காணப்படும் உள்நாட்டு வெளிநாட்டுப் புள்ளிவிபரங்கள், தரவுகளைக் காட்டவும்.

➢ பங்குபற்றுவோரது அனுபவத்தை விசாரிக்கவும்.

➢ இது எமது சுகாதாரப்பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணமாகக் காண்கின்றீர்களா ?

➢ பத்திரிகைகளில் வெளிவந்துள்ள பகுதிகளைக் காட்டவும்

இந்த முறையினைப் பயன்படுத்தி அமர்விற்கான ஆக்கபூர்வமான பிரவேசத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நீங்கள் விழிப்புணர்வுடனிருத்தல் வேண்டும்.

பிரவேசத்துக்காக 5 நிமிடங்களைப் பயன்படுத்தவும்.

கற்றல் குறிக்கோள்-1

ஆண் பெண் பால் நிலைக்கும், ஆண் பெண் சமூக நிலைக்கும் இடையிலான வேறுபாட்டினை வரைவிலக்கணப்படுத்தல்.

Activity

1 வது செயற்பாடு

- Flip Chart/ Magi Board ஒன்றினை எடுத்து இரண்டு பகுதிகளாகப் பிரிக்குக (பெண் மற்றும் ஆண் என)
- பங்குபற்றுவோரை 2 குழுக்களாகப் பிரிக்குக
- அவர்களைப் பெண், ஆண் குழுக்களாகப் பெயரிடுக
- பெண் என்பதன் மூலம் நீங்கள் உணர்வது என்ன? ஆண் என்பதன் மூலம் நீங்கள் உணர்வது என்ன? என்பதனைப் பலகையின் இரண்டு பகுதிகளிலும் எழுதச் சொல்லவும்
    - உதாரணமாக :- பெண் - மென்மையானவள், அப்பாவி ..... முதலியன
    - ஆண் :- கம்பீரமானவன், குடும்பத்தைப் பராமரிப்பவன் ..... முதலியன
- பின்னர் இரண்டு குழுவினதும் பெயர்களை மாற்றி மீண்டும் எழுதச் சொல்லவும்.
- ஒவ்வொரு குழுவினாலும் எழுதப்பட்ட விடயங்களைக் கலந்துரையாடவும் அந்த விடயங்களின் ஊடாக பெண் ஆண் பால் நிலை மற்றும் பெண் ஆண் சமூக நிலை ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டினைப் புரிந்து கொள்வதற்குப் பங்குபற்றுவோருக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.

காலம்:- 30 நிமிடங்கள்

முக்கியம்

இந்தக் கலந்துரையாடலின் போது, பங்குபற்றுவோரது கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயிற்றுவிப்பாளர் திறமை பெற்றிருக்க வேண்டும். கருத்து வேறுபாடுகளைக் குறைத்து, பின்னர் இது குறித்துச் சிந்திப்பதற்கு முயற்சித்தல் பிரயோசனமானது. ஒருபக்கத்தினருடன் ஒத்துப் போவது போன்ற நிலைமையைக் காட்டாதிருப்பதற்கும், பிரச்சினையான நிலைமையை உக்கிரமடைவதற்கு உதவாமலிருப்பதற்கும் நீங்கள் கரிசனை காட்ட வேண்டும்.



Activity
2 வது செயற்பாடு

- உங்களுக்கு மீண்டும் ஒரு புது வாழ்வு கிடைத்தால் நீங்கள் ஆணாகவா அல்லது பெண்ணாகவா பிறக்க விரும்புவீர்கள்?
- சகல பங்குபற்றுநரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்கவும்.
- அதனை எழுதுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- அவற்றில் சிலவற்றைப் பயிற்றுவிப்பாளர் தெரிவு செய்து கலந்துரையாடவும். தமது பதிலினை நியாயப்படுத்தும் காரணிகளை வெளிப்படுத்தும்படி கூறவும்.
- பெண் ஆண் பால்நிலை மற்றும் பெண் ஆண் சமூக நிலை ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டினைப் பற்றி பங்குபற்றுவோருக்குப் புரிந்துணர்வினைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கவும்.

காலம்:- 30 நிமிடங்கள



Activity
3 வது செயற்பாடு

- பெண் ஆண் சமூக நிலைபற்றிய பங்குபற்றுவோரது அனுபவங்களை விசாரிக்கவும். (பெண்ணானதால் அல்லது ஆணானதால் ஏதாவது உரிமையை இழந்ததாக உணர்ந்த சந்தர்ப்பம், அப்படி இல்லையென்றால் பெண்ணானதால் அல்லது ஆணானதால் சந்தோஷத்துக்கு ஆளான சந்தர்ப்பம் போன்ற பல்வேறு விடயங்களாகலாம்)

- பங்குபற்றுநர் பலரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்கவும்.

- அவர்களது பல்வேறு அனுபவம் மற்றும் சமூகத்தில் அவர்கள் கண்டவை பற்றிக் கலந்துரையாடவும்.

காலம்:- 30 நிமிடங்கள்

பயிற்றுவிப்பாளரால் தயாரிக்கப்பட்ட ஊடுகாட்டிகள் ஊடாக பெண் ஆண் பால் நிலை மற்றும் பெண் ஆண் சமூக நிலைகளுக்கிடையிலான வேறுபாட்டினை விளங்கச் செய்யவும். கலந்துரையாடவும்.

பெண் ஆண் பால்நிலை (Biological Sex)	**பெண் ஆண் சமூக நிலை** (Gender)
■ இது இயல்பான, உயிரியல் வெளிப்பாடு	■ இது இயல்பான, உயிரியல் வெளிப்பாடு அல்ல
■ பெற்றோரது பிறப்புரிமையியல்புப்படி நுகம் விருத்தியடையும்பொழுது (XX, XY) பெண் ஆண் பால்நிலை தீர்மானிக்கப்படும்	■ பெற்றோரது பிறப்புரிமையியல்புப்படி பெண் ஆண் சமூகநிலை தீர்மானிக்கப்படுவதில்லை.
■ வெளிப்படையான லிங்க உறுப்புக்களைக் கொண்டு இலகுவாக பெண் ஆண் பால் நிலையைத் தீர்மானிக்கலாம்.	■ லிங்க உறுப்புக்களைக் கொண்டு இலகுவாகத் தீர்மானிக்க முடியாது
■ இது நிரந்தரமானதும் பெரும்பாலும் வாழ்நாள் முழுவதும் மாறாத ஒன்றுமாகும்.	■ இது நிரந்தரமற்றதும், காலத்துக்குக் காலம் சமூகத்துக்குச் சமூகம் மாறுபடக் கூடிய ஒன்றுமாகும்.
■ சமூக, பொருளாதார, பூகோள நிலைமையைப் பொறுத்து இது மாறுபடுவதில்லை.	■ ஒரு சமூகத்தினுள் பெண் மற்றும் ஆண்களுக்கு வேறுபட்டிருக்கும் கடமை மற்றும் பொறுப்புக்களைப் பொறுத்து இது தீர்மானிக்கப்படும். ஆகையினால் சமூக, பொருளாதார, பூகோள நிலைமையைப் பொறுத்து இது மாறுபடுகிறது.



Activity

4 வது செயற்பாடு

- ஊடுகாட்டியில் எழுதப்பட்ட கீழே குறிப்பிடப்படும் 10 கூற்றுக்களையும் பங்குபற்றுவோருக்குக் காட்டவும்.
- 1 - 10 வரை இலக்கமிடப்பட்ட அட்டைகளை பங்குபற்றுவோர் சகலருக்கும் பகிர்ந்து கொடுக்கவும்.(ஒருவருக்கு 10 அட்டைகள் வீதம்)
  பெண் ஆண் பால்நிலை மற்றும் பெண் ஆண் சமூக நிலை எனப் பெயரிடப்பட்ட பெட்டிகள் இரண்டினை அவர்கள் முன் வைக்கவும்
- கீழே குறிப்பிடப்படும் சரத்துக்கள் பெண் ஆண் பால்நிலையுடனா மற்றும் பெண் ஆண் சமூக நிலையுடனா பொருந்துகின்றன எனத் தீர்மானிப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டிகளில் அந்த கூற்றுக்குப் பொருந்துகின்ற இலக்க அட்டைகளை இடும்படி கூறவும்.
- **சரியான பதில்கள் - 1, 2, 7, மற்றும் 9 ஆகியன பெண் ஆண் பால்நிலைக்குரியவை.**
  - 3, 4, 5, 6, 8, மற்றும் 10 ஆகியன பெண் ஆண் சமூகநிலைக்குரியவை
- பங்குபற்றுவோரில் எத்தனை பேர் சரியான பதிலைத் தந்தனர் என ஆராய்ந்து அதன் சதவீதத்தினைக் கணக்கிடவும்
- முடிவினைக் கலந்துரையாடவும்.
- பங்குபற்றுவோரில் பெரும்பாலானோர் சரியான பதிலைத் தராத விடயத்தினைத் தேடியறிந்து, அதுபற்றிக் கலந்துரையாடவும்.

காலம்:- 30 நிமிடங்கள்

1. கர்ப்பம் தரிப்பதற்கும், குழந்தை பெறுவதற்கும் பெண்ணினால் மட்டுமே முடியும்.

2. அதிகமான ஆண்கள், பெண்களைவிட உயரத்தில் கூடியவர்கள்.

3. பெண்கள் அதிகம் பாசமும் நேசமும் மிக்கவர்கள்.

4. நல்ல சமையலாளரும், உணவு தயாரிப்பாளரும் ஆண்களாவர்.

5. பெண்களது முக்கியமான கடமையானது, பிள்ளை வளர்ப்பாகும்.

6. ஆண்கள் பெண்களைவிடக் கூடிய புரிந்துணர்வுடன் சிந்திப்பர்.

7. கருக்கட்டலுக்கென விந்தினை வழங்கக் கூடியவர்கள் ஆண்களே.

8. ஆணினது முக்கிய கடமை, குடும்பத்துக்கு வருமானம் சம்பாதிப்பதாகும்.

9. ஆண்களுக்குக் குழந்தைக்குப் பாலூட்ட முடியாது.

10. பெண்கள் பலவீனமான முகாமையாளராவர்.

வாழ்நாள் முழுவதும், பெண் ஆண் சமூக நிலை தாக்கம் செலுத்தும் விதத்தினைக் கலந்துரையாடி விளங்கச் செய்யவும்.



Activity

5 வது செயற்பாடு

- பங்குபற்றுவோரை 4 குழுக்களாகப் பிரிக்கவும்.
  - 1வது குழு - குழந்தை, பிள்ளை பருவத்தினர்
  - 2வது குழு - யௌவன மற்றும் இளம் பருவத்தினர்
  - 3வது குழு - நடுத்தர மற்றும் வளர்ந்த பருவத்தினர்
  - 4வது குழு - முதிய பருவத்தினர்

- இந்தப் பருவங்களில் பெண் ஆண் சமூக நிலை அன்றாட வாழ்வில் தாக்கம் செலுத்தும் விதத்தினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்குக் குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.

- குழு வேலையை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்
- முன்வைத்ததன் இறுதியில், வளவாளர், முன்வைக்கப்படாத விடயங்களை ஊடுகாட்டியைப் பயன்படுத்தி விளக்கிக், கலந்துரையாடுவார்.

குழந்தை, பிள்ளை பருவத்தினர்

- இலங்கையில் பெண் ஆண் பால்நிலையைப் பொறுத்து குழந்தைகளிடம் காட்டும் அன்பு, பாதுகாப்பு மற்றும் கவனிப்புக்களில் வேறுபாடுகள் உள்ளனவா?
- தாய்ப்பாலூட்டல், மேலதிக ஆகாரம் கொடுத்தல், தடுப்பூசி பெற்றுக் கொடுத்தல், நோய்நிலைமைகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொடுத்தல் ஆகியன சாதாரணமாக பெண் ஆண் பால்நிலையைப் பொறுத்து வேறுபடுகின்றனவா?
- பெண் குழந்தையும் / ஆண்குழந்தையும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்கும் பொழுது அங்கே வேறுபாடு காட்டப்படுகின்றனவா?
- கல்வியில் சகல சமூக நிலைமைக்கும் சமனான சந்தர்ப்பங்கள் உள்ளனவா?
- குடும்பத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகளில் குடும்பத்தின் மூத்த பெண்பிள்ளைக்கு ஏதாவது அழுத்தம் இருக்கிறதா?
- அவசர ஆபத்து நிலைமைகளில், அதிகளவு அழுத்தம் இருப்பது யாருக்கு?
- பெண் ஆண் பிள்ளைகள் பேண வேண்டிய நடத்தை முறைகள் சமூகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளனவா?

  கலந்துரையாடவும்.

புதுயௌவன மற்றும் இளம் பருவத்தினர்

- பெண் பிள்ளைகளின் பூப்பெய்துதல் தொடர்பாகக் காணப்படும் நம்பிக்கைகள் யாவை?
  உதாரணம்:- - கொழுப்பு மற்றும் புரதம் கூடிய உணவுகள் நல்லதல்ல.
  - மாதவிடாய்க் காலங்களில் குளிக்கக் கூடாது.
- கட்டிளமைப் பருவத்தில் பெண் பிள்ளைகளை விட, ஆண்பிள்ளைகளின் உணவு குறித்துப் பெற்றோர் அதிகம் கரிசனையும் கவனமும் செலுத்துதல், பெண் பிள்ளைகளில் இரத்தச் சோகை ஏற்படுவதற்கு இது காரணமா?
- வளரும் பெண் பிள்ளைகளை விட, ஆண்பிள்ளைகளுக்கு ஆகாரம் அதிக அளவில் அவசியப்படுமா?
- பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாதுகாப்பு, ஆண்பிள்ளைகளைவிட அதிகமா?
  அப்படிச் செய்வதற்குக் காரணம் யாது?
- ஆண் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாதுகாப்புத் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தாத காரணத்தால், அவர்கள் மோசமான அழுத்தங்களுக்கு ஆளாவதுண்டா?
  உதா:- விபத்துக்கள், காயமடைதல், துஷ்பிரயோகம், பாலியல் துன்புறுத்தல்
- வீட்டில் பெண் ஆண் பிள்ளைகள் இருவரும் வீட்டு வேலைகளில் உதவுகின்றனரா? அதில் ஏதாவது வேறுபாட்டினைக் காண்கின்றீர்களா?
- விரைவில் திருமணம் செய்து கொடுப்பது யாருக்கு?
  சமூகத்தில் இது குறித்துக் காணப்படும் சிக்கலான நிலைமையினைக் கலந்துரையாடலின் போது வெளிக்கொணர்க.

வளர்ந்தோரும் நடத்தரவயதினரும்

- குடும்பத் திட்ட செயற்பாடுகளுக்கு அதிகம் உட்படுத்தப்படுபவர்கள் பெண்களா?
- ஆண்கள் பொருளாதார ரீதியில் உயர்ந்த நிலையில் உள்ளனரா?
- குடும்பப் பிரச்சினைகளில் அதிக பொறுப்புக்கள் பெண்கள்மீது சுமத்தப்படுகிறதா?
- பெண்கள் இம்சைக்கு ஆளாகும் வீதம் அதிகமானதா?
- சுகாதாரப் பிரச்சினைகள் இந்தப் பருவத்தில் ஆண்களுக்கு அதிகமா?
- அதற்கான காரணம் என்ன?

முதிய பருவத்தினர்

- ஆண் பெண் இரு பாலாரும் இந்தச் சமூகக் கட்டமைப்பில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனரா?
- சுகாதாரத்தைப் பொறுத்தவரை அவர்கள் பலவீனமான நிலையில் இருப்பதனால், எதிர்பார்க்கப்படும் சுகாதார சேவைகள் அவர்களுக்கு உரிய முறையில் கிட்டுகின்றனவா?
- ஆண்களுக்கு அதிகளவில் சொத்துக்களின் உடைமைகளும் பொருளாதார நிலைமையும் இருப்பதனால், முதிய வயதில் நல்ல கவனிப்புக் கிடைக்கின்றதா?

பங்குபற்றுவோருடன் அவர்களது அனுபவம் குறித்துக் கலந்துரையாடவும். நீங்கள் ஒரு பகுதியினருடன் ஒத்துப் போகின்றீர்கள் எனக் காட்ட வேண்டாம்.

இதில் உள்ள சாதாரண மற்றும் அசாதாரணநிலைமைகள் பற்றி அவர்கள் சிந்திப்பதற்கு இடமளிக்கவும்.

கற்றல் குறிக்கோள்-2

பெண் ஆண் பால்நிலையுடன் சம்பந்தப்பட்ட அடிப்படை அறிகுறிகள் / பொதுவான கருத்துரைகளை அடையாளம் காணுதல்

முதலில் வளவாளரினால் அடிப்படை அறிகுறிகள் / பொதுவான கருத்துரைகள் மெகி பலகையில் எழுதப்படும். இதனை ஆங்கிலம், தமிழ் மொழிகள் இரண்டிலும் எழுதிக் காட்டுக. அந்தக் கருத்துரைகளில் கூறப்படுபவை பற்றி விசாரித்தறிக. பதில்களைப் பெறுவதற்குக் கரிசனை காட்டுக.

பெண் ஆண் சமூக நிலையுடன் சம்பந்தப்பட்ட அடிப்படை அறிகுறிகள்

தொடர்புகள் (Relational) - பெண் ஆண் சமூக நிலை ஊடாக பெண் மற்றும் ஆணிடையே உள்ள தொடர்பு சமூக ரீதியில் மேம்படும் விதமும் மற்றும் பேணப்படும் விதமும் பிரதிபலிக்கும்.

படி நிலை (Hierarchy) - இது வரிசைப்படி ஏற்படும் மேல்கீழ் நிலைமையினைப் பிரதிபலிக்கும். ஆண் பால் நிலையுடன் தொடர்பான குணங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் பெண்பால் நிலையுடன் தொடர்பான குணங்களையும் செயற்பாடுகளையும் விட முக்கியத்துவம் கொடுக்கும் சமூகச் சூழ்நிலை காணப்படுகிறது. இது குடும்ப அமைப்பு மற்றும் சமூகத்தினுள் அதிகாரத்தைப் பகிர்வதில் சிக்கலை உருவாக்கும்.

மாறும் தன்மை (Dynamic) - பெண் ஆண் சமூக நிலை மாற்றங்களுக்கு உட்படும். சமூக மற்றும் கலாசார மாற்றங்களுடன் இது மாறுபடலாம். சம்பந்தப்பட்ட பெண் ஆண் கடமைகள், நடத்தைகளின் மாற்றத்துடன் இலகுவில் மாறக் கூடியது.

Context Specific
(கட்டமைப்புக்குரியது) - பெண் ஆண் சமூக நிலையுடன் தொடர்பான செயற்பாடுகளும் தொடர்புகளும், பல்வேறு ஜாதி, மத, சமூக, பொருளாதார மற்றும் கலாசாரக் கட்டமைப்புக்கள் போன்றவற்றைப் பொறுத்து மாறுபடும்.

Institutional
(நிறுவன ரீதியானது) - இது நிறுவன ரீதியிலான வழமையான பெண் ஆண் தொடர்புகளைப் பொறுத்துச் செயற்படும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். சமூகத்தில் காணப்படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாயங்கள், சட்டதிட்டங்கள் முதலியவற்றுடன் ஒருங்கிணைந்து காணப்படும். அந்தந்த நிறுவனத்துக்கு வேறுபட்ட வரையறைகள் காணப்படும்.
உதாரணம்:- குடும்பம், வேலைத்தலம், பாடசாலை.....

ஆணாதிக்கம் (Patriarchy) -

- சம்பிரதாயபூர்வமாக ஆணாதிக்கம் என்பதன் மூலம் கருதப்படுவது தந்தையை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்களையாகும். அதாவது குடும்ப அலகுக்கு உரித்தான சகலதும் (நபர்கள், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் முதலியன) ஒரு ஆணினைச் (குடும்பத் தலைவன்) சுற்றி முன்னிலைப்படுத்தி அவனது ஆட்சிக்கு உட்பட்டிருத்தல். தற்காலத்தில் இது மிகவும் விரிவாக சகல சமூக தொடர்புகள் மற்றும் செயற்பாடுகளில் ஆண் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து, பெண்ணினை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துதல் என விபரிக்கப்படுகிறது.

- தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்கள் ஆணாதிக்கக் கருத்தின் அடிப்படையில் அமைந்தவையா?

- குடும்பத்தினுள் இது காணப்படுதல் சிறந்ததா?

- சகல உறுப்பினர்களும் மற்றும் சொத்துக்களும் வீட்டின் அடிப்படை ஆணின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்றனவா?

- குடும்பத்தின் சகல நடவடிக்கை (பணம், சொத்து) முகாமைத்துவத்தில் முக்கிய தீர்மானமெடுப்பவர் ஆணா?

- ஆணாதிக்கக் கருத்தினால் ஏதாவது இம்சைகள் பெண்களுக்கோ பிள்ளைகளுக்கோ ஏற்படுமா? ஏற்படுமானால் அது எல்லா வகுப்பினருக்கும் பொதுவானதா?

- குடும்பத்தினுள் மட்டுமன்றி வேலைத்தலம், மற்றும் பல்வேறு சமூகமட்டத்தில் இது இடம்பெறுகிறதா?

- இதன் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் கலந்துரையாடவும்.

Equality - சமமான தன்மை, பங்கேற்பு, வளப்பகிர்வு, மற்றும் முகாமைத்துவம், தீர்மானம் மேற்கொள்ளல், சலுகைகளைப் பெறல் ஆகிய விடயங்களில் பெண் ஆண் ஆகிய இரு பிரிவினரையும் சமனாகக் கவனித்தல்.

உதாரணம்:- குடும்பச் சொத்துக்களைப் பிரித்தல்
தொழில் பெற்றுத் தரல்,
கூலி வழங்குதல்.....முதலியன

Equity (சமத்துவம்) - பெண்களதும் ஆண்களதும் தேவையின் அடிப்படையில், அவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் வழங்குதல். பெண் ஆண் சமூக நிலை மூலம் நிர்ணயிக்கப்பட்ட சமூக மாறுபாடுகளின்படி அவர்களுக்கு அநியாயம் ஏற்படாமலிருப்பதற்கு வழி செய்தல்.

Gender Mainstreaming - பெண் ஆண் ஆகிய இரு பிரிவினருக்கும் ஒரே சமனான முறையில் பலன் கிடைக்கும் வண்ணம் செயற் திட்டங்கள், நீதி மற்றும் கொள்கை வளங்கள், திட்டங்கள் வகுத்தல், செயற்படுத்தல், மற்றும் மேற்பார்வை. போன்ற சகல விடயங்களையும் அபிவிருத்தி, அரசியல், மற்றும் சமூக மட்டங்களிலும் செயற்படுத்தல்.

(காலம் - 1½ மணித்தியாலம்)

தந்தையை அடிப்படையாகக் கொண்ட தாயை மையப்படுத்திய குடும்பம், இலங்கையின் கலாசாரத்தின்படி சிறந்ததாக அமைவதோடு, இம்முறை குடும்பத்தைச் சிறப்பாகக் கொண்டு செல்வதற்கும் காரணமாய் அமையும் என விளக்கவும்.

கற்றல் குறிக்கோள்-3

பெண் ஆண் சமூக நிலை அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தங்களை அடையாளம் காணுதல்



Activity

1 வது செயற்பாடு

மனித வள வேட்டை
The human treasure hunt

- மெய்வல்லுநர் விளையாட்டில் ஈடுபட்டுள்ள பெண் ஒருவர். ☐
- தொழில் செய்கின்ற பாட்டி ஒருவர் இருக்கும் / இருந்த ஒருவர். ☐
- முன்பள்ளி ஆசிரியராகக் கடமை புரியும் ஒரு ஆண். ☐
- பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாகப் பங்கேற்கும் ஒரு தந்தை. ☐
- தொடர்ந்து பெண் தலைமைத்துவத்தின் கீழ் வேலை செய்த ஒரு ஆண். ☐
- சாரதியாகக் கடமை புரியும் பெண் ஒருவர். ☐

- மேற்குறிப்பிட்ட விடயங்கள் 6 இனையும் கொண்ட அட்டைகளை ஒருவருக்கு ஒன்று வீதம் பங்குபற்றுவோர் சகலருக்கும் வழங்கவும்
- ஒருவரையொருவர் அணுகி (ஏனைய பங்குபற்றுவோரிடம் சென்று) விசாரித்து அவர்களது குடும்பத்தில் மேலே குறிப்பிட்ட நபர்கள் உள்ளனரா என அறிந்து விடை காணும்படி கூறவும்.
- விடைகளை அடைப்புக் குறிக்குள் ✓ எனும் அடையாளத்தினால் குறிக்கும்படி ஆலோசனை வழங்கவும்.
- விடயங்கள் 6 இற்கும் ✓ எனும் அடையாளமிட்டோரை வேறு இடத்திற்குச் செல்லும்படி கூறவும்.
- 10 நிமிடத்தில் விடையளிப்பதை நிறுத்தச் செய்யவும்.
- பங்குபற்றுவோரது விடைகளை கலந்துரையாடவும்.
- விடயங்கள் 6 இற்கும் ✓ எனும் அடையாளமிட்டோர் உள்ளனரா என விசாரிக்கவும். (இவையாவற்றிற்கும் ✓ எனும் அடையாளத்தினைப் பெறுதல் இலகுவானதல்ல எனக் காட்டவும்)
- அதற்கான காரணத்தைக் கலந்துரையாடவும்.
- பெண் ஆண் சமூக நிலை இதற்கான அடிப்படையாயமைவதைக் காட்டித் தரவும்.
- பெண் ஆண் சமூக நிலை தொழில்மீது தாக்கம் செலுத்தும் முறைகளை விளக்கவும்.

Activity

2 வது செயற்பாடு

சிலந்தி வலை
The spider's web

- வகுப்பறையில் அல்லது வெளியில் கீழே காட்டப்பட்டவாறு பெரிய வட்டமொன்றை வரைக.
- அதனை 6 பிரிவுகளாகப் பிரித்து இங்கே காட்டப்பட்டுள்ளவாறு பெயரிடுக.
- பங்குபற்றுவோரை வட்டத்தைச்சுற்றி நிற்கும்படி அமைக்குக.
- வளவாளர் நூல் பந்து ஒன்றினைக் கையில் வைத்துக் கொண்டு வட்டத்தின் நடுவில் நின்று கொள்க.
- சம்பவக் கற்கையொன்றைச் செவிமடுக்கும் வண்ணம் அவர்களைக் கேட்டுக் கொள்ளவும்.

சம்பவக் கற்கை - Case study

ரூபா மூன்று பெண் பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. அவளது தந்தை ஒரு தொழிலாளி, தாய் அவளது சிறு வயதிலேயே இறந்து விட்டாள். ரூபா மூன்றாம் வகுப்புவரை மட்டுமே படித்து இருக்கிறாள். 16 வயதில் திருமணமான அவளுக்கு முதலாவது குழந்தை பிறக்கும்போது வயது 17. தனது கணவனது போடிபோக்குத் தன்மையினால், பலவிதமான இன்னல்களுக்கு ஆளான அவள், தனது குழந்தைக்கான பால்மாவுக்குக் கூட பணம் பெறுவதற்கு மிகவும் சிரமப்பட்டாள். அடுத்தடுத்து இரண்டு குழந்தைகளைப் பெற்ற அவள், அடிக்கடி நோய் வாய்ப்பட்டாள். மீண்டும் கர்ப்பம் என அறிய வந்தபோது அவள் அதிகமான சஞ்சலத்துக்கு ஆளானாள். சில வாரங்களின் பின் ரூபா திடீரென நோய் வாய்ப்பட்டதுடன் கடுமையான காய்ச்சல், அடிவயிற்றில் நோவு, யோனிவாயினூடாக இரத்தப் பெருக்கு ஆகியவற்றின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்களின் பின் மரணமடைந்து விட்டாள். மரணமடையும் போது அவளுக்கு வயது 20. **பாதுகாப்பற்ற கிருமித்தொற்று ஏற்படும் கர்ப்பச் சிதைவுக்கு** (Septic Abortion) அவள் ஆளாகியிருக்கலாம் எனப் பிந்திய அறிக்கைகள் குறிப்பிட்டன.



இந்தக் கதையுடன் தொடர்புடைய ஒவ்வொரு சம்பவத்தையும் கேட்டு, அதற்கான காரணிகளைப் பங்குபற்றுவோரிடம் விசாரித்தறியவும்.

- ☐ 3ம் வகுப்பு வரை மட்டும் படித்தமை.
- ☐ 16 வயதில் திருமணமானமை.
- ☐ அவளுக்கு முதலாவது குழந்தை கிடைக்கும் போது வயது 17.
- ☐ அடுத்தடுத்து இரண்டு குழந்தைகள் பிறந்தமை.
- ☐ மரணமடையும்போது அவள் வயது 20. பாதுகாப்பற்ற கர்ப்பச் சிதைவுக்கு ஆளாகியிருக்கலாம் எனப் பின்னர் அறிக்கை கிடைத்தமை.

- அவர்களுக்குத் தோன்றுகின்ற விதத்தில், அந்தச் சம்பவங்களின் காரணிகளை வட்டத்தில் காட்டப்பட்டுள்ள எந்தப் பிரிவுக்குரியவை என விசாரிக்குக.

- நூல் பந்தின் நுனியினை வளவாளர் பற்றிக் கொண்டு, பதிலளித்த பங்குபற்றுநரை நூல் பந்தினை எடுத்துக் கொண்டு பொருத்தமான பிரிவுக்குச் செல்லும்படி கோரவும்.

- இந்தச் சம்பவத்துக்கு மேலும் காரணிகள் உள்ளனவா என விசாரிக்குக. அப்படியாயின் பொருத்தமான பிரிவுக்கு நூல் பந்தினை எடுத்துக் கொண்டு செல்லும்படி பங்குபற்றுநரை அறிவுறுத்தவும்.(இங்கே ஒவ்வொரு பங்குபற்றுநரும் தமது பதிலினை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்).

- ஒரு சம்பவத்துடன் தொடர்பான காரணிகள் முடியும் போது, நூல் பந்து மீண்டும் வளவாளர் கையில் இருக்க வேண்டும்.

- அதன் பின் அடுத்த சம்பவத்துக்குப் போகவும்.

- அதற்கான காரணிகளை விசாரிக்குக. ஒவ்வொரு நபரிடமும் நூல் பந்தினை எடுத்துக் கொண்டு பொருத்தமான பிரிவுக்குச் செல்லும்படி அறிவுறுத்தவும்.

- அந்தச் சம்பவத்துடன் தொடர்பான சகல காரணிகளும் முடிந்த பின்னர், நூல் பந்து மீண்டும் வளவாளர் கையில் இருக்க வேண்டும்.

- இப்படி ஒவ்வொரு சம்பவமும் தொடர்ந்து கலந்துரையாடப்படும்போது நூல் சிலந்தி வலை போல் பின்னிக் கொள்கின்ற முறையைக் காணலாம்.

- சில சம்பவங்களுக்குக் காரணிகள் பல இருக்கின்ற நிலைமையையும், அதன் சிக்கல் தன்மையையும் சுட்டிக்காட்டவும்.

- அதன் பினனர் ஒவ்வொரு அழுத்தத்தினையும் குறைப்பதற்கு சுகாதார சேவையாளராக நாம் செய்யக் கூடிய செயற்பாடுகளைக் கலந்துரையாடவும்.

- தீர்வு கிடைக்கும் காரணியுடன் தொடர்பான நூலை வெட்டி விடவும்.(கடைசி அறிக்கையிலிருந்து நூலை வெட்டவும்).

- கடைசியில் நூலின் நுனித் துண்டு வளவாளர் கையில் எஞ்சும்.

- இந்தச் சம்பவத்துக்கு பெண் ஆண் சமூக நிலை, அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தம், பொருளாதார, சமூக, மற்றும் கலாசார ரீதியில் பல்வேறு வகைகளாயிருப்பதனைச் சுட்டிக்காட்டவும்.

- சில அழுத்தங்களுக்கு சுகாதார சேவையாளராக நாம் கொடுக்கக்கூடிய தீர்வுகள் எதுவுமில்லை என்பதனையும் சுட்டிக்காட்டவும்.

- சிலந்தி வலையில் அந்தக் காரணிகளுடன் தொடர்பான நூல் துண்டுகள் வெட்டப்படாமல் எஞ்சியிருப்பதனை எடுத்துக் காட்டவும்.

பெண் ஆண் சமூக நிலை அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தம்

பெண் ஆண் சமூக நிலை அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தத்தைப் பற்றிய கருத்தினை விசாரித்துக் கலந்துரையாடுக.

சமூக ரீதியில்

- ஆண்கள்தான் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்து இருக்கிறதா?
- குழந்தைகளைப் பராமரித்தல் பெண்கள் மட்டும்தான் செய்ய வேண்டுமா?
- அடிப்படைத் தேவைகளுக்காக பெண் ஆணிடம் தங்கியிருக்கத்தான் வேண்டுமா?
- பெண் மட்டும்தான் சமையல், துவைத்தல் உட்பட வீட்டு வேலைகளில் ஈடுபட வேண்டுமா?

கலாசார ரீதியில்

- வீட்டின் ஆதாரம்.
- ஆண்கள் தனியாகப் பயணம் செய்யச் சுதந்திரம் உண்டு / பெண்கள் தனியாகப் பயணம் செய்யச் சுதந்திரம் உண்டா?
- வம்சப் பெயர்.
- ஆண் பிள்ளைகளுக்கு விசேட கவனிப்புக் காட்டப்படுகிறதா?
- குடும்பச் சொத்துக்கள் அதிகம் கிடைப்பது ஆண்களுக்கா?
- குடும்பத்தின் தலைமைத்துவம் / முடிவெடுத்தல்
  குடும்பத்துக்குப் பெண் குழந்தை பிறத்தல் / குழந்தை கிடையாமை போன்றவற்றிற்கான காரணம் சுமத்தப்படுவது யார் மீது?
- பொறுப்புடன் கூடிய பாலியல் வாழ்வு பெண்ணுக்கு மட்டுமே உரியதா ?
  உதாரணம்:- கன்னித் தன்மை
- விசுவாசம் பெண்ணிடம் மட்டும் எதிர்பார்க்கப்படுவதால் அவளது வாழ்வில் இது அழுத்தத்தை உருவாக்குகிறதா?

தொழில் துறை ரீதியில்

- இலங்கையில் அதிகமான துறைகளில் பெண் ஆண் இருபாலாரும் தோளோடு தோள் சேர்ந்து செயற்படுகின்றனரா?
- மேல்மட்ட முகாமைத்துவம், பொறியியல், தொழினுட்பம் போன்ற துறைகளில் பெண்களுக்குள்ள சந்தர்ப்பம் / ஈடுபாடு குறைவானதா?
- சமூகத்தினால் பெண் ஆண் இருபாலாரும் அந்தந்த தொழிற் துறைகளுக்கெனப் பிரிக்கப்பட்டுள்ளனரா?
- தொழிற் துறைகளுக்குரிய முறையில் பெண் ஆண் இருபாலாருக்கும் சம்பளம் சமமாகக் கிடைக்கிறதா?

கல்வி ரீதியில்ரீதியில்

- பெண் ஆண் இருபாலாருக்கும் சமமான கல்வி பெறும் உரிமை கிடைக்கிறதா?
- திருமணத்தின் பின் மேற்படிப்புக்கென, வேலை செய்யும் பெண்கள் முயற்சிக்கின்றனரா?
- திருமணத்தின் பின் வேலைக்குச் செல்வதற்கு, கணவனுக்குள்ளது போன்று சுதந்திரம் மனைவிக்கும் இருக்கிறதா?
- பல்கலைக்கழகக் கல்வியல் பெண்பிள்ளைகளின் பிரதிநிதித்துவத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

பொருளாதார ரீதியில்

- பொருளாதார மற்றும் உற்பத்தித் துறையில் பொறுப்புகளும் உரிமைகளும் பங்கிடப்படுவதில் பாரபட்சம் காணப்படுகிறதா?

  ஆண்கள் - உரிமை மற்றும் சொத்துகளுக்கு அதிகளவில் உரிமை கோருகின்றனரா?

  பெண்கள் - உற்பத்தி நடவடிக்கைகளில் அதிகமாகத் தமது சிரம பங்களிப்பினை அதிகளவில் வழங்குகின்றார்களா?

அரசியல் ரீதியில்

- பெண் இனம், தான் வசிக்கின்ற சிறிய சமூகத்தை மையமாகக் கொண்டு சமூக சேவை மற்றும் முகாமைத்துவ வேலைகளில் ஈடுபடுவர். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் குறைவு.
- அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரிவாக இருப்பது ஆண்களே.
- பெண்களுக்கு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏதாவது தடைகள் உள்ளனவா?

கற்றல் குறிக்கோள்-டி

பெண் ஆண் சமூக நிலை நீதி, நியாய நிலையின் மீது ஏற்படுத்தும் அழுத்தங்களைக் குறைக்கும் முறைகளை விபரித்தல்.

பெண் ஆண் சமூக நிலை நீதி, நியாய நிலைகளின் மீது ஏற்படுத்தும் அழுத்தங்கள் எவை என விசாரிக்குக. பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமாக நீதியும் நியாயமும் கிடைக்கின்றனவா? அப்படி இல்லையென்றால் அதற்கான காரணங்களை ஆராய்க.

- இங்கே பங்குபற்றுவோரை 3 சிறு குழுக்களாகப் பிரித்து, நீதி, நியாய நிலைகளின் மீது ஏற்படுத்தும் அழுத்தங்களைக் குறைப்பது எப்படி என கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- டிமை தாளில் எழுதி முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- இதற்கு அவசியமானால், இன்னுமொரு வளவாளரின் உதவியையும் பெற்றுக் கொள்க.
- இதற்கென குழுக்களுக்கு ஒரு மணித்தியால நேரம் கொடுக்கவும். (சிறு குழுவேலை, முன்வைப்பு மற்றும் கலந்துரையாடல்களுக்கென)
- பின்னர் வளவாளர் தேவையான நிலைமைகளை ஊடுகாட்டியைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடவும்.

நீதி, நியாயநிலைகள் கிடைக்காதிருப்பதற்கான அழுத்தங்களுக்குரிய காரணிகள் / தடைகள் யாவை?

உதாரணமாக:-

- சமூக சம்பிரதாயம்
- சமமான உரிமை கொடுபடாமை
- கலாசாரத் தாக்கம் (பழைய சமூக முறை – கணவனை மையப்படுத்தியது)
- ஆணாதிக்கம்
- பெண் / மனைவி பொறுத்துப் போக வேண்டும் எனும் உணர்வு சமூகத்தில் இருக்கின்றமை.
- திருமணத்தின் போது பெண்ணிடம் சீதனம் எதிர்பார்க்கப்படுதல்.
- வீட்டில் சகல வேலைகளும் பெண்ணினாலேயே செய்யப்பட வேண்டும் எனும் மனப்பான்மை.
- ஏழ்மை
- வீட்டு வன்முறை
- நீதித் துறை செயற்படாமை, நியாயமற்ற நிலைமையில் வாழ்வதற்குப் பழக்கப்பட்டிருத்தல்
- மதுபாவனை / போதைப் பொருள் ஆகியவற்றால் ஏற்படும் இம்சைகள்
- குடும்பத்தின் முதியோரது எதிர்மறையான மனப்பாங்கு
- பெற்றுக் கொண்ட கல்வி மட்டம் (கல்வியில் உயர்ச்சியும், கல்வி பெறாமையும், பிரச்சினையான நிலைமைகளை உருவாக்கலாம்).

பங்குபற்றுவோர் இந்த அமர்வின் போது, கற்கைக் குறிக்கோள்களில் 1 - 3 வரை கற்ற விடய தானங்களின்படி, பெண் ஆண் சமூக நிலை நீதி, நியாயநிலை ஆகியவற்றின்மீது ஏற்படுத்தும் அழுத்தங்களைக் குறைப்பது எப்படி என்பது குறித்துக் கலந்துரையாடுதல் முக்கியமானது.

நீதி, நியாயநிலை ஆகியவை கிடைக்காதிருப்பதற்கான அழுத்தங்களைக் குறைப்பதில் சுகாதார சேவையாளர்களினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. சுகாதார சேவையாளராக அவர்களிடம் பாரிய பொறுப்புக்கள் உள்ளதனைச் சுட்டிக்காட்டுவதோடு, அவர்களது மட்டத்தில் செய்ய வேண்டியவைகளை விசாரணை செய்க.
   உதா:- வீட்டுத் தரிசிப்பின்போது.
   முன்பள்ளிப் பாடசாலை வேலைத் திட்டங்களின் போது
   பாடசாலை மட்ட சுகாதார நடவடிக்கைகளின் போது.

2. வீட்டு வேலைகளின் போது, பெற்றோர் பிள்ளைகளுக்கு வேலைகளைப் பிரித்துக் கொடுக்கும் போது மகள் செய்ய வேண்டிய வேலை, மகன் செய்ய வேண்டிய வேலை எனப் பிரிக்காது, அவர்கள் பொதுவாக இந்த வேலைகளுக்கென பழக்கப்படுதல் / செய்வித்தல்.

3. வீட்டு வேலைகளின் போது பெண் ஆண் பேதமின்றி பங்கெடுக்கச் செய்வதற்கு முன்பாடசாலை மட்டத்தில் இருந்தே பயற்றுவித்தல் பிரயோசனமானது. பாடசாலை, வீடு, சமூகத்தில், பிள்ளைகள் பரம்பரைக்கு இதன் முக்கியத்துவத்தை விளங்கச் செய்து அவர்களுக்குள் அப்படியான உணர்வுகள் ஏற்படுவதற்கு ஆசிரியர், முதியோர் கரிசனை காட்டுதல்.

4. இளைஞர் குழுக்களுக்கும் சமத்துவம், சகோதரத்துவம் பற்றி உள்ள அறிவினை மேம்படுத்துவதற்குக் கரிசனை காட்டுதல்.

5. மத நம்பிக்கைகளை ஏற்படுத்தல்

6. சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை பற்றி அதிகம் கரிசனை காட்டுதல்.

மதிப்பீடு :-

- இதுவரை இடம்பெற்ற நடவடிக்கைகளின் சாராம்சத்தை முன்வைக்குக
- பங்குபற்றுவோரிடம் கேள்விகள் பலவற்றை முன்வைத்து பதிலைப் பெறவும்
- அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவவும்.
- அப்படியான சமுதாயத் தடைகளுக்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடுக.

பெண் ஆண் சமூக நிலை காரணமாக இடம்பெறும் இம்சைகளைக் குறைத்தலும் தவிர்த்தலும்

1. தலைப்பு - குடும்பத்தினுள் சுகாதார நிலைமையை உயர்த்துவதற்கான ஆண்களின் பிரசன்னமும் பங்களிப்பும்

2. காலம் - 1 1.∴2 மணித்தியாலம்

3. அடிப்படைக் கருதுகோள்:-
   - குடும்பத்தினுள் சுகாதாரத்தை உயர்த்துதல்
   - குடும்ப அங்கத்தினரது சந்தோஷம், புரிந்துணர்வினை விருத்தி செய்தல்.
   - குடும்பத்தின் சிறந்த பராமரிப்பு

4. எதிர்பார்க்கப்படும் நிபுணத்துவம் :-
   குடும்பத்தினுள் சுகாதாரத்தை உயர்த்துவதற்காக ஆண்களின் பிரசன்னத்தையும் பங்களிப்பையும் பெறுவதுடன், அது தொடர்பான அறிவு, மனப்பாங்கு மற்றும் ஆற்றல் (Knowledge / Attitude / Skills) ஆகியவற்றை விருத்தி செய்தல்.

5. விஷேட குறிக்கோள் / கற்கைக் குறிக்கோள் (நடவடிக்கை)
   1. குடும்பத்தினுள் சுகாதாரத்தை உயர்த்துவதற்காக ஆண்களின் பிரசன்னத்தைப் பிரதிபலிக்கும் முறைகளை அடையாளம் காணல்
   2. ஆண்களின் பிரசன்னத்திற்கான தடைகளை அடையாளம் காணல்
   3. ஆண்களின் பிரசன்னத்திலும் பங்களிப்பிலும் உள்ள நன்மைகளை விபரித்தல்
   4. ஆண்களின் பிரசன்னத்தைப் பெற்றுக் கொள்ளும் உபாயங்களை அடையாளம் காணல்

6. கற்றல் / கற்பித்தல் உபகரணங்கள் :-
   - OHP / ஊடுகாட்டி
   - மெகி பலகை / பேனா
   - டிமை தாள் / பிளாட்டிக்னம்

7. கற்பித்தல் முறைகள் - கூடிக்குலாவல் முறை, விரிவுரை, கலந்துரையாடல், தீவிர பங்களிப்பு, சிறு குழுக் கலந்துரையாடல், மற்றும் முன்வைப்பு

8. உட்பிரவேசம் - முன்மாதிரியான பிரவேசமொன்றைச் செய்வதற்கு வளவாளர் கரிசனை காட்ட வேண்டும்.

   உதாரணம் - அமர்வின் கற்கைக் குறிக்கோளை முன்வைக்கவும் தலைப்புக்குப் பொருத்தமாகத் தயாரிக்கப்பட்ட படமொன்றை ஊடுகாட்டி மூலம் முன்வைத்து அமர்வினை ஆரம்பித்தல்.

   காலம் - 5 நிமிடங்கள்

கற்றல் குறிக்கோள்–1

குடும்பத்தில் சுகாதாரத்தை மேம்படுத்தலுக்காக ஆண் பங்களிப்பு கிடைப்பதனைப் பிரதிபலிக்கும் முறைகளை அடையாளம் காணல்.



Activity

1 வது செயற்பாடு

- ஆண் பங்களிப்பு தத்தமது குடும்பங்களுக்கு கிடைக்கிறதா / கிடைக்கவில்லையா என பங்குபற்றுவோரை இவ்விருவராகக் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கவும். (கூடிக்குலாவல் முறை) 5 நிமிடங்கள் இருவருக்கும் அது சமபந்தமாகக் கருத்துப் பரிமாறுவதற்கு ஆலோசனை வழங்கவும்.
- ஆண்கள் வீட்டு வேலைகள் / சேவைகள் மற்றும் பொறுப்புக்களுக்கு உதவுகின்றனரா எனக் கேட்டு என்ன விதத்தில் ஆண் வர்க்கத்தின் பங்களிப்புக் கிடைக்கின்றது எனப் பலகையில் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.

பங்குபற்றுவோர் பலருக்குப் பலகையில் எழுதி முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.

ஊடுகாட்டியின் உதவியுடன் ஆண் பங்களிப்புக் குறித்து விளக்கவும்.

- ஆணிடமிருந்து குடும்பத்துக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்
- வீட்டு வேலைகளுக்கு உதவி புரிதல்
- வீட்டில் சகலரது உரிமைகளையும் பாதுகாத்துத் தரல்

என்பன அவர்களது விருப்பத்தில் இடம் பெறவேண்டும்

Activity

2 வது செயற்பாடு

- பங்குபற்றுவோரை 3 குழுக்களாகப் பிரிக்கவும்.
  - 1 வது குழு :- ஆண் பங்களிப்பு தத்தமது குடும்பங்களுக்கு கிடைக்கிறது என்பதனைக் காட்டும் முறை
  - 2 வது குழு :- ஆண் பங்களிப்புக் குறைவதற்கான காரணம்
  - 3 வது குழு :- ஆண் பங்களிப்பின் சாதகமான நிலைனம

- இந்த ஒவ்வொரு சந்தர்ப்பம் குறித்தும் கலந்துரையாடுவதற்குக் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- குழுவேலையை முன்வைப்பதற்கு நேரம் வழங்கவும்.
- குழுவேலையை முன்வைத்தபின்னர், வளவாளர் பங்குபற்றுவோர் முன்வைக்காத விடயங்களை ஊடுகாட்டியின் உதவியுடன் விளக்கிக் கலந்துரையாட வேண்டும்.

குடும்பத்தினுள் சுகாதாரத்தை உயர்த்துவதற்காக, ஆணின் பங்களிப்பு தத்தமது குடும்பங்களுக்கு கிடைக்கிறது என்பதனைக் காட்டும் முறைகள்

உதாரணம்:-

- நேர்முகமான தந்தையின் பங்களிப்பு அந்தக் குடும்பத்துள் காணக் கிடைக்கும்.
- குடும்ப உறுப்பினரிடையே மகிழ்ச்சி, புரிந்துணர்வு, ஒற்றுமை காணப்படும்.
- பொறுப்பு மிக்க தாய் தந்தையர் அங்கே காட்சியளிப்பர்.
- கணவனினால் மனைவி, மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புப்பற்றி அதிகளவில் கரிசனை காட்டப்படும்.
- குடும்பப் பிரச்சினைகளில் கணவன் தனியே தீர்மானம் எடுக்க மாட்டான்.
  உதாரணம்:- மனைவியின் / பெரியோரின் உதவி பெறப்படும்.
- கிளினிக்குகளுக்கு மனைவி மற்றும் குழந்தைகளை கூட்டிச் செல்வதற்குக் கரிசனை காட்டுவர்.
- குடும்பத்தின் சந்தோஷத்துக்காக நேரத்தைச் செலவு செய்வர்.
- மனைவி, மற்றும் குழந்தைகளின் சுகாதாரம் பற்றி அறிந்து கொள்வதில் அதிகளவில் கரிசனை காட்டுவர்.
- குழந்தைகளின் பராமரிப்பில் மனைவிக்கு உதவியாயிருப்பர்.
- மனைவி, மற்றும் குழந்தைகளின் போஷாக்கினைப் பாதுகாப்பர்.
- குடும்பத் திட்ட முறைகளைப் பாவிக்க இருவரும் முனைவர்.
- மனைவியை சந்தேகப்படமாட்டான், அவள் அவமானம் /கேலிக்கு உட்படுத்தப்படமாட்டாள்.
- மனைவி, மற்றும் குழந்தைகளின் ஆளுமை வளரும் வகையில் நடவடிக்கை இடம்பெறும்.
- கணவன் வீடு வரும் வரை மனைவி எதிர்பார்ப்புடன் காத்திருப்பாள்.
- கணவனது பங்களிப்பினை மனைவி எப்பொழுதும் பாராட்டுவாள்/பெருமையடைவாள்.
- கணவனது விருப்பு வெறுப்புக்களைப் பற்றி மனைவி கவனமெடுப்பாள்.
- பரஸ்பர கௌரவத்தைக் காப்பாற்ற இருவரும் நடவடிக்கை எடுப்பர்.
- ருசியான இரவு உணவுகளைத் தயாரித்து குடும்பத்தின் சகலரும் ஒன்றாக அமர்ந்து உணவுண்ணுதல் இடம்பெறும்.

காலம் 25 நிமிடங்கள்

கற்றல் குறிக்கோள்-2

ஆண்களின் பிரசன்னத்திற்கான தடைகளை அடையாளம் காணல்

ஆண் பங்களிப்புக் குறைவதற்கான காரணம்

- ஆண்கள் வீட்டு வேலைகளையும், குழந்தைகளின் வேலைகளையும் செய்வதனைத் தாழ்வானதாகக் கருதுதல்.
- வீட்டு வேலைகள் பெண்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டதென்ற உணர்வு.
- பெற்றோர் முதியோரது அழுத்தம்
  உதா:- அம்மா, மாமி, சகோதர சகோதரிகளது அழுத்தம்
- கூட்டாளி நண்பர்களது எதிர்மறையான மனப்பாங்கு.
- பெண்கள் ஆண்களைத் தமது வேலைகளில் சேர்த்துக் கொள்ளாமை
- ஆண்களின் பிரசன்னம் பெண்களால் மதிக்கப்படாமை. / புரிந்து கொள்ளப்படாமை
- ஆண்களுக்கு வீட்டில் தினசரி இடம்பெறும் செயற்பாடுகளைப் பற்றிய புரிதல் இன்மை. உதாரணம் - ஆண்களுக்கு அவர்களது பெற்றோர் அவை பற்றிக் காட்டித்தராதிருத்தல் அல்லது குடும்பத்தில் அப்படியான முன்மாதிரியை அனுபவித்திராது இருத்தல்.
- குழந்தை பெறுதலும் வளர்த்தலும் பெண்ணுக்கு மட்டுமே உரிய கடமை எனும் மனப்பாங்கு
- வீட்டு வேலைகளில் பங்குபெறுவதற்கு ஆண்களுக்கு நேரமில்லாதிருத்தல்.
- சம்பிரதாயர்வமாக சமூகத்தில் காணப்படும் வேறுபட்ட பார்வைகள்.
  உதாரணம் :- கடந்த கால குடும்ப முறைமைகளும் நிகழ்கால குடும்ப முறை றமைகளும்
- வீட்டு வன்முறைகள்
- புகைத்தல், மதுபானம் மற்றும் சூதாட்டத்திற்கு அடிமையாதல்

காலம் 20 நிமிடங்கள்

கற்றல் குறிக்கோள்-3

ஆண்களின் பிரசன்னத்திலும் பங்களிப்பிலும் உள்ள நன்மைகளை விபரித்தல்

நன்மையான நிலைமை

- குடும்பத்தின் பாதுகாப்பு அதிகரித்தல்
- சமாதானமும் ஒத்துழைப்பும் விருத்தியடைதல்
- மகிழ்ச்சியும் புரிந்துணர்வும் அதிகரித்தல்
- வீடு பிரியமுள்ள இடமாக மாறுதல்
- ஆணினது வேலையினைப் பாரட்டுவதன்மூலம் கிடைக்கும் மனமகிழ்ச்சி அதிகரித்தல்
- குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரத்தில் அதிக கவனம் செலுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படல்.
- குடும்பத்தின் போஷாக்கு விருத்தியடைதல்
- குடும்பப் பிரச்சினைகள் குறித்து சரியான தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமாயிருத்தல்
- ஆத்மீக ஈடுபாடு ஏற்படல்
- எய்ட்ஸ் போன்ற பாலியல் நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்
- அவசியமற்ற கர்ப்பம், கருச்சிதைவு இடம்பெறாதிருத்தல்
- குழந்தைகளின் உள மற்றும் சமூக அபிவிருத்தி விருத்தியடைதல்.
- குடும்பத்தின் தேவைகள் மிகவும் வெற்றிகரமான விதத்தில் நிறைவேற்றப்பட முடியுமாயிருத்தல்.
- ஏனையோருக்கு முன்மாதிரியாக இருப்பதற்கு முடியுமாயிருத்தல்.
- அயலவரது வரவேற்புக் கிடைத்தல்
- நோய்களுக்கு ஆளாதல் குறைவடைதல்
- குழந்தைகளுக்கிடையே இடைவெளியைப் பேணுவதற்கு முடியுமாயிருத்தல்.
- பொருளாதாரம் விருத்தியடைதல்
- தந்தை நிலை பற்றிய மகிழ்ச்சி உருவாதல்
- தாய் தந்தையர் முன்மாதிரியாயிருப்பதனால் பிள்ளைகளுக்கு உரிய வழிமையக் காட்டக் கூடியதாயிருத்தல்.
- சகாதார சேவையைப் பற்றி இருக்கின்ற நம்பிக்கை அதிகரித்தல

காலம் 35 நிமிடங்கள்

இறுதியில் இந்த நன்மைகள் பற்றிய புரிந்துணர்வினைக் கொடுத்து குடும்பங்களில் ஆண்களின் பங்களிப்பினை முன்னேற்றுவது பற்றிக் குடும்பங்களை அறிவூட்டுதல் ஆரம்ப சுகாதார சேவையாளரது கடமையில் மிகவும் அவசியமான ஒன்றென அவர்களது கவனத்துக்குக் கொண்டு வரவும்.

கற்றல் குறிக்கோள்–4

ஆண்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளும் உபாயங்களை அடையாளம் காணல்



Activity

3 வது செயற்பாடு

- ஆண்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளும் உபாயங்கள் யாவை என்பது குறித்துக் கேள்வி கேட்கவும். பங்குபற்றுவோரை 3 குழுக்களாகப் பிரித்து அவர்களது கருத்துக்களைக் கலந்துரையாடி முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- தேவையான உபகரணங்களை வழங்கவும்.
- முன்வைத்தல் முடிந்தபின் கலந்துரையாடவும்.
- குறைபாடுகளை ஊடுகாட்டித் தாளின் மூலம் காட்டித் தெளிவுறச் செய்யவும்.

ஆண்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும், விருத்தி செய்து கொள்வதற்குமான ஆரம்ப சுகாதார சேவையாளரது கடமைகள்

முன்பாடசாலை / பாடசாலை:-

- வீட்டு வேலைகளில் பெண் ஆண் பேதமின்றிப் பங்களிப்புச் செய்வதற்கு முன் பாடசாலை மட்டத்தில் இருந்து பயற்சியளிப்பதன் முக்கியத்துவம் குறித்து முன்பாடசாலை ஆசிரியரை அறிவூட்டுதல்.

வீட்டுத் தரிசிப்புக்களின் போது:-

- ஆண்களது பங்களிப்பினை மதிப்பதற்குப் பெண்களை அறிவூட்டுதல்
- குடும்பத்தில் தீர்மானம் மேற்கொள்ளும்போது இருவரும் கருத்துப் பரிமாறி, தீர்மானம் மேற்கொள்வதற்கு உற்சாகமளித்தல்.
- குடும்பத்தின் அங்கத்தினர்கள் மகிழ்வுடன் உள்ளனரா எனக் கண்காணித்தல்
- இருவரும் தொழிலில் ஈடுபட்டிருந்தால், குழந்தைகளது வேலைகள். பாதுகாப்புடன் இடம்பெறுகின்றனவா என விசாரித்து, அது பற்றிய பிரச்சினைகள் இருப்பின் அவற்றினைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவுதல்.
- குடும்பத்தின் அங்கத்தினர்களது மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தல்.
- சுகாதார சம்பந்தமான பிரச்சினைகளில் அதிக கவனத்தைப் பெற்றுக் கொடுத்தல்
- வீட்டு வேலைகளில் ஆண் பிள்ளையையும் பங்கு கொள்ளச் செய்வதற்கு தாய்மாரை அறிவூட்டுதல்

கிளினிக்குகளில்

- கிளினிக்குகளுக்குச் சமூகமளிக்கும் தம்பதியரை வரவேற்றலும், அவர்களைப் பாராட்டுதலும்.
- சுகாதாரக் கல்வி உபதேசங்களுக்குக் காதுகொடுப்பதற்கு ஆண்களையும் பங்குபெறச் செய்தல்.
- இருவருக்கும் பொருத்தமான தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- கிளினிக்குகளுக்குச் சமூகமளிக்கும் கணவன்மாரது வரவின் முக்கியத்துவம் குறித்துத் தெளிவுறச் செய்தல்.
- பிரச்சினைகள் காணப்படும் தம்பதியரை ஆலோசனைக்கென அனுப்பி வைத்தல்.

இளைஞர் சமூகம் / இளைஞர் கூட்டங்களின்போது :-

- ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், உபசரித்தல், ஒவ்வொருவரது கருத்துக்களுக்கு கௌரவமளித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிக் சுட்டிக்காட்டல். அதன் மூலம் அவர்களுக்கு, எதிர்கால குடும்ப வாழ்வில் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்துப் புரிய வைத்தல்.

தந்தையர் கூட்டங்களில் :-

- வீட்டு வேலைகளில் ஆண்களது பங்குபற்றல் கிடைக்கும்போது, குடும்பத்தின் மகிழ்ச்சி மற்றும் புரிந்துணர்வு விருத்தியடைவதனையும், அதன் மூலம் குடும்பத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம் என்பதனையும் காட்டுதல்.

மக்கள் மைய வேலைத் திட்டங்கள் மற்றும் சமூக சேவை வேலைத் திட்டங்களில் :-

- ஆரம்ப சுகாதார சேவையாளர், குழுவாக பிரதேசத்தில் இப்படியான வேலைத் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- வீட்டு வேலைகளில் ஆண்களது பங்குபற்றல் கிடைக்கும்போது குடும்பத்தின் மகிழ்ச்சி மற்றும் புரிந்துணர்வு விருத்தியடைவதனைக் சுட்டிக்காட்டுதல்.
- கிராமிய மட்டத்தில் இடம்பெறும் தன்னார்வ வேலைத் திட்டங்களில் இருபாலாரையும் கலந்து கொள்ளும்படி செய்தல்.
- இலக்குக்குழு (Target group) முறையினைப் பயன்படுத்தி ஆண்களது பங்குபற்றலுடன் வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவுகின்ற விதம் குறித்துக் கலந்துரையாடல்.
- ஆண்களது பல்வேறு கூடாத பழக்கங்களைக் குறைத்தல் / தவிர்த்தலுக்கான உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- இப்படியான வேலைத் திட்டங்களில், இருபாலாருக்கும் பல்வேறு பொறுப்புக்களை ஒப்படைத்தலும் அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டலின் மூலம் ஒற்றுமையுடனும், சந்தோஷத்துடனும் இலக்கினை எய்தக் கூடியதாயிருப்பதனை எடுத்துக் காட்டுதல்.
- பிரதேசக் கூட்டங்களில் இது குறித்துப் பேசுதல்.

காலம் - 30 நிமிடங்கள்

வீட்டுத் தரிசிப்புக்களின் போது, குடும்ப நல உத்தியோகத்தர் அடையாளம் கண்ட ஆணின் பங்களிப்புக் குறைந்த அல்லது கிடைக்காத குடும்பங்கள் குறித்த நிலைமைகளை, பிரதேசக் கூட்டங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கையளிக்க வேண்டும்.

ஆணின் பங்களிப்பினை விருத்தி செய்யும் இவ்வாறான வேலைத் திட்டங்களில், குடும்ப நல உத்தியோகத்தர் போன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உதவியும் அர்ப்பணிப்பும், மிகவும் முக்கியமானதென்பதனைப் புரியச் செய்யவும்.

ஆண்களுக்கு விடயங்களைப் புரியச் செய்யும்பொழுது, வீட்டு வேலைகளில் ஆணின் பங்களிப்பினை அதிகரித்தல், வீட்டு வேலைகளில் அவர்கள் பங்குபற்றச் செய்தல், பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஒரு பொறுப்பு என்பதனைக் கவனத்தில் கொள்க.

பெண் ஆண் சமூகநிலையை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தலும் தவிர்த்தலும

1.தலைப்பு :-

பெண் ஆண் சமூகநிலை, சுகாதாரத்திலும், இனப்பெருக்க சுகாதாரத்திலும் ஏற்படுத்தும் அழுத்தங்கள்.

2. நேரம் :-

3 மணித்தியாலம்

3. அடிப்படைக் கருதுகோள் :-

பெண் ஆண் சமூகநிலை, சுகாதாரத்திலும் இனப்பெருக்க சுகாதாரத்திலும் ஏற்படுத்தும் அழுத்தங்களைக் குறைப்பதன் மூலம், ஆரோக்கியமான பரம்பரையையும் சமூகத்தையும் உருவாக்குவதற்குப் பங்களிப்பினை வழங்குதல்.

4. எதிர்பார்க்கப்படும் நிபுணத்துவம் :-

பெண் ஆண் சமூகநிலை, சுகாதாரத்தினும் இனப்பெருக்க சுகாதாரத்தினும் ஏற்படுத்தும் அழுத்தங்களை அடையாளம் காண்பதன்மூலம் அவற்றினைக் குறைப்பதற்கு அவசியமான திறமையினை ஏற்படுத்தல்.

5. விசேட குறிக்கோள் / கற்றல்:-

I. பெண் ஆண் சமூகநிலை சுகாதாரத்திலும், இனப்பெருக்க சுகாதாரத்திலும் ஏற்படுத்தும் அழுத்தங்களை அடையாளம் காணல்.

II. பெண் ஆண் சமூகநிலை, கர்ப்பகால நிலையின்மீது ஏற்படுத்தும் பயன்மிக்க / பாதிப்புமிக்க அழுத்தங்களை விபரித்தல்.

III. இனப்பெருக்க சுகாதாரத்திற்கான உரிமையை அடையாளம் காணல்.

IV. பெண் ஆண் சமூகநிலை, இனப்பெருக்க சுகாதாரத்திற்கும் கர்ப்பகால நிலையின்மீதும் ஏற்படுத்தும் பாதிப்புமிக்க அழுத்தங்களை குறைப்பதற்கும், நுகர்வோரது இனப்பெருக்க சுகாதாரத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கும், சுகாதார சேவையாளருக்குள்ள கடமை மற்றும் பொறுப்புக்களை விபரித்தல்.

6. கற்பித்தல் / கற்றல் உபகரணங்கள் :-

- OHP ஊடுகாட்டித்தாள்
- டீமை பேப்பர / பேனா
- மேகி பலகை / பேனா
- புதினப் பத்திரிகைகளில் வெட்டி எடுக்கப்பட்ட இதனுடன் தொடர்பான சம்பவங்கள்

7. கற்பித்தல் முறைகள்

- விரிவுரை
- பயற்சியாளரின் முன்வைப்பு
- அறிவுக் கலப்பு முறை (Brain Storming)
- சிறு குழுக் கலந்துரையாடல்
- சம்பவ ஆய்வு

பிரவேசம்.

- அமர்வின் நோக்கம் :- கற்கைக் குறிக்கோள் மற்றும் கருத்துரைகளை பங்குபற்றுவோருக்குத் தெளிவாக்குதல்
- இந்த விடயத்துடன் தொடர்பாக அவர்களிடம் உள்ள கள அனுபவம் ஒன்றிரண்டைப் பற்றி விசாரித்தல்
- பெண் ஆண் சமூகநிலை, சுகாதாரத்திலும், இனப்பெருக்க சுகாதாரத்திலும் அழுத்தங்களை ஏற்படுத்துமா?
- பிரவேசம் பொருத்தமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் அமைய வேண்டும்.
- முதலாவது பாடத்திட்டத்திலிருந்த ரூபாவின் கதையை ஞாபகப்படுத்தல்.

கற்றல் குறிக்கோள்-1

பெண் ஆண் சமூகநிலை காரணமாக, சுகாதாரத்திலும், இனப்பெருக்க சுகாதாரத்திலும் ஏற்படக்கூடிய அழுத்தங்களை அடையாளம் காணல்.

பெண் ஆண் சமூகநிலை, பெண்களதும் ஆண்களதும் சுகாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்கள்

பெண்கள் :-

- இரும்புச் சத்துக் குறைபாட்டினால் உண்டாகும் இரத்தச் சோகை பெண்களிலேயே அதிகம் காணப்படுகிறது- அவர்களது உணவுமுறை இதற்குக் காரணமாயிருக்கலாம்.
- ஓஸ்டியோபொறஸிஸ் ஏற்படுவதற்கான நிலைமை, ஆண்களைவிடப் பெண்களுக்கு 8 மடங்கு அதிகம். இதற்கு பெண் ஆண் பால் நிலையை விட அவர்களது உணவுமுறை காரணமாயிருக்கலாம் என ஆய்ந்தறியப்பட்டுள்ளது.
- குடும்பத்தின் பொறுப்பு, அழுத்தம் அதிகரிப்பதன் காரணமாக மனஅழுத்தம் (Depression) ஏற்படுவதற்கான நிலைமை ஆண்களைவிடப் பெண்களுக்கு 3 மடங்கு அதிகம்.

ஆண்கள்:-

- சிரோஸிஸ் - ஈரல் அழிவு- நோய் -அதிகம் மதுபானம் பாவிப்பதனால் ஏற்படலாம்.
- நுரையீரல் புற்று - அதிகம் புகை பாவிப்பதனால் ஏற்படலாம்.
- இதயம் சம்பந்தமான நோய்களும், இதயக் குருதிக் குழாய்களில் இரத்தம் கட்டியாதலும்.
- சிலிகோஸிஸ் நோய் - விசேடமாக சுரங்கத் தொழிலாளருக்கு ஏற்படும்.
- வீதி விபத்துக்களால் ஏற்படும் நோய்கள்.
- விளையாட்டுக்களில் ஈடுபடுவதனால் ஏற்படும் நோய்கள்.
- யுத்தத்தினால் ஏற்படும் நோய்கள் / ஆபத்துக்கள்.

பெண் ஆண் சமூகநிலை, பெண்களதும் ஆண்களதும் இனப்பெருக்க சுகாதாரத்தில் அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடியது. பெண்கள் மட்டுமல்லாது, ஆண்களும் பெண் ஆண் சமூகநிலை காரணமாக நிர்ணயிக்கப்படும் நடத்தை மற்றும் பழகும் முறைகளுக்கு அமைவாக வாழ்வினைக் கொண்டு செல்வதால், அவை இனப்பெருக்க சுகாதாரத்தின்மீது மோசமான அழுத்தத்தினை ஏற்படுத்தும்.

உதாரணம்:-

1. குடும்பத் திட்ட முறைகளின் பாவனைக்கு இடமளிக்கப்படாததால் அவசியமற்ற கர்ப்பம் தரித்தல், பாதுகாப்பற்ற கர்ப்பச் சிதைவு மற்றும் தாய் மரணங்களுக்கு வழிவகுக்கும்.
2. இறப்பர் கொண்டம் பாவனைக்குக் காட்டப்படும் தயக்கம் / புறக்கணிப்புக் காரணமாகவும் அதிக பாலியல் தொடர்புகளாலும் பாலியல் சம்பந்தமான நோய்த் (STD/HIV) தொற்றுக்களுக்கு ஆளாதல்.

பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக பெண் ஆண் சமூகநிலை மூலம் இழைக்கப்படும் அநீதிகளின் காரணமாகவும். அவர்களது இனப்பெருக்க சுகாதாரத்தின்மீது மோசமான தாக்கம் ஏற்படுகிறது.

ஊடுகாட்டித்தாள், அறிவுக் கலப்பு முறை (Brain Storming) ஆகியவற்றைப் பாவித்து இதுபற்றி பங்குபற்றுவோரை அறிவூட்டவும்.

பெண் ஆண் சமூகநிலை இனப்பெருக்க சுகாதாரத்திற்கு ஏற்படுத்தும் அழுத்தங்கள், வாழ்வின் பருவங்களுக்கு ஏற்றபடி மாறுபடும் விதத்தினை விபரித்தல்.

யௌவனப் பருவம்

- பெண் பிள்ளைகளது கல்வி இடைநடுவில் நின்றுவிடுவதற்கான வாய்ப்பும் காரணிகளும் மிக அதிகம். ஆகவே எதிர்காலத்தில் தமது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய புரிந்துணர்வினைப் பெறுவதற்கு அசௌகரியம் ஏற்படலாம்.
- குறைந்த வயதில் பெண்பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்தல்.
- யௌவன வயதில் கர்ப்பம் தரித்தல் (Teenage pregnancies), தாய் மரணத்துக்கும் குழந்தை மரணத்துக்கும் காரணியாகும்.
- யௌவன வயதில் பெண்பிள்ளைகள், பாலியல் துஷ்பிரயோகத்துக்கும், உறவுக்கும் உட்படுத்தப்படும் சந்தர்ப்பம் அதிகம்.
- பெண்பிள்ளைகள் சில வேளைகளில் பாலியல் தொழிலில் பலாத்காரமாக ஈடுபடுத்தப்படலாம்
- பெண்பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும், உறவுக்கும் பாலியல் தொழிலிலுக்கும் உட்படுத்தப்படுவதனால் உடல் / உள ஆரோக்கியம் போன்று, பாலியல் தொற்று நோய்களாகிய STD / HIV போன்ற நோய்களுக்கு ஆளாகும் நிலைமையும் ஏற்படலாம்.
- பெண்பிள்ளைகள் போன்று ஆண் பிள்ளைகள் மேல் பெற்றோர் கரிசனை காட்டாததால் / அதிக கவனம் கொள்ளாததனால் அவர்கள் ஆபத்துமிக்க / அபாயகரமான அனுபவங்களைப் பெறத் தூண்டப்பட்டு, பொருத்தமற்ற பாலியல் நடத்தையைக் கைக்கொள்ளும் நிலையிருப்பின், பாலியல் தொற்று நோய்களாகிய STD/HIV போன்ற நோய்களுக்கு ஆளாகும் நிலைமை அதிகமாகும்.

இளமைப் பருவமும் திருமண வாழ்வும்

- இளம் பெண்பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் பலாத்கார உறவுக்கும் உட்படுத்தப்படும் சந்தர்ப்பம் அதிகம்.
- பெண்கள் அவசியமற்ற கர்ப்பம் தரித்தல் காரணமாக பாதுகாப்பற்ற கர்ப்பச் சிதைவுக்குள்ளாதல். இதனால் பல்வேறு தொற்றுக்கள் மட்டுமன்றி மரணம்கூட ஏற்படலாம்
- பெண்கள் தமது வாழ்க்கைத் துணையால் அல்லது உறவுகளால் வீட்டு வன்முறைக்கு ஆளாவதனால் பல்வேறு குறைபாட்டு நிலைமைகள் ஏற்பட முடியும்.
- மண வாழ்விற்கு அற்பாற்பட்ட பாலியல் தொடர்புகளால், STD/HIV போன்ற பாலியல் தொற்று நோய்களுக்கு ஆளாதல்.

பின்வரும் காரணிகளால் எச்.ஐ.வி வைரஸ் ஆண்களைவிட பெண்களது உயிருக்கு சவாலாய் அமைகின்றது. (அறிந்து கொள்வதற்காய்)

- இந்திரியம் யோனித் துவாரத்தில் நீண்ட நேரம் தங்கியிருப்பதனால், வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான அபாயம் பெண்களுக்கு அதிகம். இந்திரியத்தின் தொற்றும் தன்மை, யோனித் திரவத்தின் தொற்றும் தன்மையை விட மிக அதிகம். ஆகவே ஆபத்தும் அதிகம்.
- இந்திரியம் HIV வைரஸ் கலம் வளர்வதற்கு மிகச்சிறந்த போஷாக்கு ஊடகம்.
- யோனித் துவாரத்தின் மேலணிக் கலத்தின் கனம் HIV வைரஸ் தொற்று அதிகரிப்பதற்குக் காரணியாகிறது.
- 18 வயதுக்குக் குறைந்த மற்றும் மாதவிடாய் நின்ற பெண்களுக்கு வைரஸ் தொற்றுவதற்கான ஆபத்து அதிகமாகும்.
- யோனித் துவாரத்தின் பரப்பளவு அதிகமான காரணத்தால், பெண்களுக்கு வைரஸ் தொற்றுவதற்கான தன்மை, 2 – 4 மடங்கு அதிகமாகும்.
- ஆண்குறியின், மேற்பரப்பினை விட, யோனித் வழியின் மேற்பரப்பு அதிகம் என்பதால், யோனித் வழியின் மேலணிக்கலம் தொற்றுக்குள்ளாவதற்கான ஆபத்து அதிகமாகும்.

முதிய மற்றும் வயோதிபப் பருவத்தில்

- பெண்களுடன் தொடர்பான நோய் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குச் சிகிச்சைகள் வழங்கும் சேவைகள் காணப்படினும் (உதா:- சுகவனிதையர் கிளினிக் / பெண்ணோயியல் கிளினிக் முதலியன) ஆண்களுடன் தொடர்பான நோய் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குச் தீர்வுகள் பெறுவதற்கான சேவைகள் மிகக் குறைவு.

(காலம்- 30 நிமிடங்கள்)

கற்றல் குறிக்கோள்-2

பெண் ஆண் சமூகநிலை, கர்ப்பகால நிலையின்மீது ஏற்படுத்தும் அழுத்தங்களை அடையாளம் காணல்

பெண் ஆண் சமூகநிலை கர்ப்பமாகும் பெண்மீது சிறந்த / மோசமான அழுத்தங்களை ஏற்படுத்துகிறது என்பதனை, சமூகத்தில் காணப்பட்ட மற்றும் காணப்படும் நிகழ்வுகள் மூலம் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

வளவாளர் கீழே காணப்படும் சிறந்த / மோசமான அழுத்தங்களை பங்குபற்றுவோரது கலந்துரையாடல் வழியாக வெளிக்கொணர்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

சிறந்த அழுத்தங்கள்

- கணவரது, பெற்றோரது, உறவினர், நண்பர்களது. சமூகத்தினது மற்றும் வேலைத் தலத்தினது விசேட கவனத்தை ஈர்த்தல்
- ஆண் தலைமைத்துவ குடும்பத்தில், அவரால் மளன்வி பராமரிக்கப்படுதல், அவளது பாதுகாப்பு மற்றும் போஷாக்குக் குறித்து விசேட கவனத்தைச் செலுத்துதல்.
    - கிளினிக்கிற்குக் கூட்டிச்செல்ல அக்கறை எடுத்தல்.
    - மேலதிக உணவு கொடுத்தல்.
    - சமபோஷாக்கு உணவுகள் வழங்குதல்.
    - அவள் விரும்பும் உணவுகள் வழங்குதல்.
- கர்ப்ப காலப் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில், ஆரம்ப சுகாதார சேவை விசேட கவனத்தைச் செலுத்துதல். (3000 சனத்தொகைக்கு ஒரு குடும்ப நல உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு, அவரது பிரதான கடமையாக தாய் சேய் சுகாதாரம் நிர்ணயிக்கப்பட்டிருத்தல்)
- கர்ப்பிணித் தாய் சகல பாக்கியங்களினதும் ஒரு அடையாளம் என சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கின்றமை.

மோசமான அழுத்தங்கள்

கர்ப்பிணித் தாய்மாரில் 15 வீதமானோர், ஆபத்து நிலைமைக்கு முகம் கொடுப்பதோடு, அவர்களுக்கு மிகத் திருப்தியான சகாதார சேவை வசதிகள் அவசியமாகிறன. இந்தக் கர்ப்பிணித் தாய்மாருக்கு ஏற்படும் ஆபத்து நிலைமைக்கான காரணிகளை ஆராயும் போது பெண் ஆண் சமூகநிலை, பெருமளவு இதில் அழுத்தம் கொடுக்கின்றதெனக் காணக் கிடைக்கிறது.

- இலங்கையில் கர்ப்பிணித் தாய்மாரில் 30வீதமானோர் இரத்தச் சோகையுடன் உள்ளனர்
    - கணவரதும் குழந்தைகளதும் போஷாக்குக்கு முதலிடம் வழங்கும் காரணத்தால், வீட்டில் சகலரும் உணவுண்டதன் பின்னரே கர்ப்பிணிப் பெண் உணவுண்ணும் வழக்கத்தைக் கொண்டிருத்தல். இந்த நிலைமை கர்ப்பத்துக்கு முன்னரே காணக்கூடியது. கர்ப்பிணிப் பெண்ணுடைய போஷாக்குக் குறித்து கணவனுக்கு அறிவில்லாமை / கவனமின்மை.

தாய் உணவுண்ணும் விதம் / அளவு குறித்து கணவன் அறியாதிருத்தல், மற்றும் அது பற்றிய கரிசனையின்மை, ஆகிய சகல காரணிகளும் பெண்ணினது மந்த போஷாக்கு மற்றும் இரத்தச் சோகை ஆகியவற்றிற்குக் காரணமாகின்றன.

- போஷாக்குமிக்க உணவுகளைத் தயாரிக்க முடியாதிருத்தல் / உதவியின்மை.
- வீட்டிலுள்ள குறைபாடுகள் மற்றும் நிலைமை குறித்து இருவரும் கலந்துரையாடாதிருத்தல், கணவருக்கு அதுபற்றி அறிவிக்காமலிருத்தல்.

- கர்ப்ப காலத்தில் ஏற்படும் பாரிய விளைவுகளுக்கு இம்சைகள் காரணமாகலாம்
  1. கர்ப்ப காலப் பராமரிப்பினையும் தாய் சுகாதார சேவையினையும் உரிய காலத்தில் பெறாதிருத்தல்.
  2. யோனிவழி மற்றும் அதன் சுற்றியுள்ள இடத்தில் தொற்றுக்கள்.
  3. கர்ப்ப காலத்தில் ஏற்படும் இரத்தப் போக்கு.
  4. கர்ப்பச் சிதைவு.
  5. சாக்குழந்தைப் பிறப்பு (Still birth).
  6. குறை மாதக் குழந்தைப் பிறப்பு (Premature birth).
  7. நிறை குறைந்த குழந்தைப் பிறப்பு (Low birth weight).

- யௌவனப் பருவத்தில் கர்ப்பிணியாவதால் பெண்கள் ஆபத்துக்கு ஆளாகலாம் (படிப்பறிவின்மை, கலாசார அழுத்தம் ஆகியன இதற்குக் காரணிகளாகும்).

- பெண் அடிக்கடி கர்ப்பமடைதல்.பிரசவங்களுக்கிடையே உரிய இடைவெளியில்லாமை, குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தாமை, கணவர் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை ஏற்றுக் கொள்ளாமை மட்டுமல்லாது தனது மனைவி அவற்றினைப் பாவிப்பதனை விரும்பாமை ஆகியன இதற்குக் காரணிகளாகும்.

- வயது பிந்திக் கர்ப்பமடைவதனால் (சீதனப் பிரச்சினை, பொருளாதாரப் பலவீனம் மற்றும் வீட்டின் சகல பொறுப்புக்களையும் திருமணத்துக்கு முன்னர் முடிக்க வேண்டிய தேவை முன்னிலையாய் இருத்தல் முதலியன) கர்ப்பமடைந்த பெண்ணுக்கு ஆபத்தான நிலை ஏற்படலாம். இதனால் அவளது உயிருக்கு சவால் ஏற்படுவது மட்டுமல்லாது பிறக்கும் குழந்தைக்கும் உள, உடல் ரீதியில் பிரச்சினைகளோ குறைபாடுகளோ ஏற்படலாம்.

- கணவன் இன்னுமொரு பெண்ணுடன் வைத்திருக்கும் பாலியல் தொடர்பினால் கர்ப்பிணித் தாய் ஆபத்துக்கு ஆளாதல். பாலியல் நோய்கள் STD /HIV போன்றவை கர்ப்பமடைந்த பெண்ணுக்கு ஏற்படுவதுடன், மற்றும் பிறக்கும் குழந்தைக்கும் தொற்றக்கூடிய நிலைமையும் அதிகமாகும்.

காலம் 20 நிமிடங்கள்

கற்றல் குறிக்கோள்–3

இனப்பெருக்க சுகாதாரத்திற்கான உரிமையை அடையாளம் காணல்

இரண்டாவது உலக யுத்த காலத்தின் பின்னர், 1948 டிசம்பர் மாதம் 10ம் திகதி உருவான ஐக்கிய நாடுகள் மனித உரிமை பற்றிய சர்வ தேசப் பிரகடனத்தில் சகல மனிதருக்கும் இந்த உலகத்தில் வசிக்கும் பொழுது கிடைக்க வேண்டிய மற்றும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் பலவற்றைப்பற்றி எடுத்துரைக்கப்படுகிறது.

அந்த அடிப்படை மனித உரிமைகளாவன :-

- சுகாதார சம்பந்தமான உரிமைகள்.
- பாதுகாப்பு சம்பந்தமான உரிமைகள்.
- சமத்துவம் சம்பந்தமான உரிமைகள்.
- கௌரவம் கிடைத்தல் சம்பந்தமான உரிமைகள்.
- உளரீதியான திருப்தி சம்பந்தமான உரிமைகள்.
- தகவல் பெறும் உரிமைகள்.
- சுயகௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமை.
- பணம் சம்பாதிக்கும் உரிமை.
- தனக்கு விருப்பமான முடிவினை மேற்கொள்ளும் உரிமை.
- கல்வி பெறும் உரிமை.
- பாரபட்சத்துடன் பாரப்பதனை எதிர்க்கும் உரிமை.
- சுகாதார சேவையைப் பெறும் உரிமை.
- உணவு மற்றும் தூய நீருக்கு உள்ள உரிமை.

இப்படி அடிப்படை பனித உரிமைகள் பற்றிய பிரகடனம் சட்டமாக்கப்பட்டிருக்கும் பொழுது, சமூகத்தில் பல்வேறு நிலைகளில் (விசேடமாக பெண்கள் குறித்து), பாரதூ ரமான முறையில் மனித உரிமைகள் மீறப்படுகின்ற காரணத்தால், பெண்கள் பிரகடனம் ஒன்றின் அவசியம் எழுந்தது. ஆகையினால் 1993ம் வருடம் இலங்கை அரசு பெண்கள் பிரகடனத்தை (Women's charter) அங்கீகரித்துப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இலங்கை பெண்கள் பிரகடனம் (Women's charter)

'பெண்களது முழு அபிவிருத்திக்கும், வெற்றிக்கும் அவசியமான சகல நடவடிக்கைகள், வளங்கள் மற்றும் செயற்பாடுகளைச் செய்தல் ஆகிய விடயங்களினூடாக, ஆண்களினது போன்று சரிசமமாக பெண்களதும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல், பெற்றுத் தருதல், சுதந்திரத்துக்கெனப் பாடுபடுதல் என்பன அரசாங்கத்தின் பொறுப்பு' என அந்தப் பிரகடனம் குறிப்பிடுகிறது.

பெண்கள் பிரகடனத்தில் கீழ்க் காணப்படும் விடயங்களில் பெண்களது உரிமைகள் பற்றி விபரிக்கப்படுகிறது.

- அரசியல் மற்றும் குடியியல் உரிமை.
- குடும்ப அலகினுள் உள்ள உரிமை.
- கல்வி பெறுதல் மற்றும் பயற்சி பெறுதலுக்குள்ள உரிமை.
- பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் அதன் பலன்களைப் பெறுதலுக்குள்ள உரிமை.
- சுகாதாரம் மற்றும் போஷாக்குக்குள்ள உரிமை.
- சமூக வேறுபாடுகளினால் பாதிக்கப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கு உள்ள உரிமை.
- பெண் ஆண் சமூகநிலையினால் ஏற்படும் இம்சைகளிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கு உள்ள உரிமை.

பெண்கள் பிரகடனத்தில் காணப்படும் உரிமைகள் உரிய முறையில் பேணப்படுகின்றனவா என ஆராய்வதற்கும், மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கும் 1994ல் பெண்களுக்கான தேசிய பேரவை (National committee on Women) அமைக்கப்பட்டது.

பெண்களுக்கான தேசிய பேரவையின் பொறுப்புக்கள்

- பெண் ஆண் சமூகநிலையினால் ஏற்படும் / ஏற்பட்ட அநியாயங்கள் பற்றிய முறைப்பாட்டினை சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள அதிகாரி / நிறுவனத்துக்கு அனுப்புதல்.
- பிரகடனத்தில் காணப்படும் உரிமைகள் மீறப்படல் சம்பந்தமாகக் கிடைக்கப் பெறும் முறைப்பாட்டினை, சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்தல்
- அப்படியான சட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து, அதன் நிலைமை குறித்த வருடாந்நத அறிக்கையைத் தயாரித்தல்.
- பெண்களது உரிமைகள் பற்றிய சகல சட்ட மற்றும் அபிவிருத்திப் பிரகடனங்கள், அவற்றின் மீதான அழுத்தங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.
- பிரகடனத்தின் குறிக்கோள் குறித்து பரிசீலித்து, திருத்தங்களை முன்வைத்தல்.
- பெண்கள் விவகாரம் பற்றிய, சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தகவல் அளித்தல்.

இனப்பெருக்க சுகாதார உரிமைகள் சில கீழே விபரிக்கப்படுகிறன. இந்த உரிமையினைப் பாதுகாத்தல் பெண் ஆண் சமூகநிலையுடன் இணைந்த உண்மையான சமத்துவத்தையும் நியாயத்தையும் மேம்படுத்துவதற்கு உதவியாய் அமையும்.

1. **உயிர்வாழ்வதற்குள்ள உரிமை:-** சம்பிரதாயபூர்வமாகப் பேசப்படும் உயிர்வாழ்தலுக்கு அப்பால் கரப்பத்துடன் தொடர்பான, தவிர்க்கக்கூடிய மற்றும் சிகிச்சையளிக்கக்கூடிய சிக்கல்களினால் ஏற்படும் தாய் மரணத்தைத் தவிர்த்தலினை இது குறிக்கிறது.

2. **சரீர அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும், சுயபாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் உள்ள உரிமை :-** பாலியல் துஷ்பிரயோகம், இம்சை செய்தல், மற்றும் தாக்குதல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்குள்ள உரிமையினை இது குறிக்கிறது. கட்டாய மலட்டுத் தன்மை ஏற்படுத்தல், பலாத்காரமாகக் கர்ப்பச் சிதைவு செய்தல், குடும்பத் திட்ட முறைகளைப் பாவிப்பதற்கு சந்தர்ப்பம் அளியாது இருத்தல், பாலியல் உறுப்புக்களை விகாரப்படுத்தல் / சுன்னத் செய்தல் போன்றவையும் இதனுடன் சம்பந்தப்படுகிறது.

3. **பிரத்தியேகத் தன்மைக்குள்ள உரிமை:-**

4. **நவீன விஞ்ஞானத்தின் பலன்களைப் பெறுவதற்குள்ள உரிமை :-** பெண்ணொருவர் நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி, இனப்பெருக்க சுகாதாரச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குள்ள உரிமையை இது குறிக்கிறது.

   உதாரணம்:-
   - நவீன நுண்ணுயிர் கொல்லி மருந்துகளைப் பெற்றுக் கொள்ளல்.
   - பெண்களால் பாவிக்கப்படும், பாவிக்கப்படக்கூடிய குடும்பத் திட்ட முறைகளைப் பாவித்தல்.
   - ஆண் குடும்பத் திட்ட முறைகளை வியாபிப்பதற்கு ஆய்வு செய்தல்

5. **தகவல் அனுப்பதல், பெறுதல், மற்றும் பரிமாறுதலுக்குள்ள உரிமை:-** இனப்பெருக்க சுகாதாரச் செயற்பாடுகள் (குடும்பக் கட்டுப்பாடு, குழந்தையின் பிறப்பு, குழந்தைகளுக்கிடையிலான இடைவெளி) சம்பந்தமாகத் தீர்மானிக்கும்போது மிகத் தெளிவான அறிவூட்டலின் பின்னர் சுயமான தீர்மானத்தை மேற்கொள்வதற்குள்ள உரிமை. இந்த உரிமைகள் காரணமாக பெண்ணுக்கு பாலியல் பலாத்காரம் / துஷ்பிரயோகம் / வன்முறைகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும், அறிவூட்டப்படுவதற்கும் இயலுமாக உள்ளது. அதுபோன்று தனது துணைவன் / துணைவிக்கு பாலியல் சம்பந்தமான தொற்றுநோய்கள் உள்ளனவா என அறிந்து கொள்வதற்கும் உரிமையுள்ளது.

6. **கல்வி பெறுவதற்குள்ள உரிமை :-** இது படிப்பறிவுக்கு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இனப்பெருக்க சுகாதாரம், பாலியல் பற்ற் அறிந்துகொள்வதற்கான உரிமையுடனும் தொடர்பானது.

7. **சுகாதாரத்துக்கு உள்ள உரிமை :-** நோய் நிலைமைக்கு நிவாரணம் பெறும் சேவை, புனர்வாழ்வு சேவை வழங்கல், வேலைத் தலம், மற்றும் சூழல் தொடர்பான சுகாதார சேவை ஆகியன பெண்கள் சுகாதார சேவையுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

   உதாரணம் :-
   - கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோயை அடையாளம் காணல், அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுகாதார சேவையாகும்
   - அதுபோன்று சுகாதார சேவையாக, HIV இலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்கு உரிமை இருக்கிறது.

உரிமை தொடர்பான வட்டத்தினைப் பங்குபற்றுவோருடன் இணைத்தல்.

- ஒரு உரிமையைக் கொண்டிருத்தல், இன்னுமொரு உரிமையுடன் அல்லது பல உரிமைகளுடன் தொடர்புபட்டிருக்கிறது.
- ஆகையால் ஒன்றை இழப்பதனால், அந்த நபருக்கு அந்த உரிமை மட்டுமல்லாது, பல உரிமைகளும் இல்லாமல் போவதற்கு இடமுண்டு.

இவ்வகையில், சில இனப்பெருக்க உரிமைகள் கிடைக்காமல் விடுதல், இந்த நபரது சுகாதாரத்தின் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தும். எமது சேவை பெறுவோருக்கு சில இனப்பெருக்க சுகாதார உரிமைகள் கிடைக்காமை, சுகாதார சேவையாளராகிய எமது தூரநோக்கற்ற செயற்பாடுகளாலும் ஏற்படலாம். ஆகையால், சேவை பெறுவோரது இனப்பெருக்க சுகாதாரம் சம்பந்தப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் மூலம், அவர்களது ஆரோக்கியத்தை உயர்வடையச் செய்வதற்குப் பங்களிப்புச் செய்தல் சுகாதார சேவையாளராகிய எமது முக்கியமான பொறுப்பும், கடமையுமாகும்.

செயற்பாடு :-

- Flip Chart ஒன்றை எடுக்கவும்.
- அதன் நடுவில் ஒரு வட்டத்தை வரைக. ஒரு உரிமையை எழுதுக.
- இந்த உரிமையை மேம்படுத்துவதற்கு அவசியமான வேறு உரிமைகள் யாவை என விசாரித்து, அதனை வட்டத்தின் விளிம்பில் வேறு ஒரு வட்டம் வரைந்து அதில் எழுதவும்.
- இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடும் முறைகளைக் காட்டுவதற்குக் கோடுகளால் இணைக்குக.
- உரிமை என்றில்லாத, இருந்தும் இந்தச் செயற்பாட்டினை வெற்றிகரமானதாக ஆக்குவதற்கு அவசியமான வேறு காரணிகளை, அதற்கு வெளியே குறிப்பிடுக.
- இந்த உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நபர்கள், நிறுவனங்கள், சட்டதிட்டங்கள் பற்றி விசாரிக்குக.

கலந்துரையாடப்படக்கூடிய உரிமைகளுக்கு:

உதாரணம் :-

1. தேவையான குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் குழந்தைகளிடையே இடைவெளியைப் பேணுவதற்குப் பெண்ணுக்குள்ள உரிமை.
2. தகவல் பெறுவதற்குள்ள உரிமை.
3. பாலியல் பலாத்காரத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குள்ள உரிமை.



ஒரு உரிமை மேலும் பல உரிமைகளுடன் இணைந்திருக்கிறது. சேவை வழங்குநராகிய நாம் சேவை பெறுநருடைய ஒரு உரிமையை உடைத்தால் அதன்மூலம் பல உரிமைகள் அவருக்கு இல்லாமல் போகும்.

நேரம் - 10 நிமிடம்

கற்றல் குறிக்கோள்–4

பெண் ஆண் சமூகநிலை, இனப்பெருக்க சுகாதாரத்துக்கும், கர்ப்பநிலையின் உரிமைகளுக்கும் ஏற்படுத்தும், பாதகமான அழுத்தங்களைக் குறைப்பதற்கு சுகாதார சேவையாளருக்குள்ள பொறுப்புக்களையும் கடமைகளையும் அடையாளம் காணல்.

1. இனப்பெருக்க சுகாதாரத்துக்கு ஏற்படுத்தும் பாதகமான அழுத்தங்களைக் குறைத்தல்.
2. கர்ப்பநிலையின்மீது ஏற்படுத்தும் பாதகமான அழுத்தங்களைக் குறைத்தல்.
3. சேவை பெறுநருடைய இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய உரிமைகளைப் பாதுகாத்தல்.

பங்குபற்றுவோரை 3 குழுக்களாகப் பிரித்து இதுபற்றிக் கலந்துரையாடி அட்டவணைப்படுத்தும்படி கோரவும். (அதற்கு அவசியமான டிமை பேப்பர், பேனா ஆகியவற்றை வழங்கவும்) அதன் பின்னர். குழுவாக அவற்றினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கவும். அவர்கள் முன்வைக்காத முக்கிய விடயங்கள் இருப்பின், அவை பற்றி கலந்துரையாடி அவர்களை அறிவூட்டவும்.

சேவை பெறுநருடைய இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சுகாதார சேவையாளராகச் செய்ய வேண்டிய செயற்பாடுகள்

- **எந்த நேரத்திலும் பிரத்தியேகத் தன்மையைப் பாதுகாத்தல்**
  கிளினினிக்குகளில் சேவை வழங்கும்போது, எந்த நேரத்திலும் சேவை பெறுநருடைய பிரத்தியேகத் தன்மையைப் பாதுகாத்தல்.

- **அந்தரங்கத் தன்மையைப் பாதுகாத்தல்**
  கிளினினிக்குகளில் மட்டுமன்றி வீட்டுத் தரிசிப்பு / களப்பயணங்களில் பெற்றுக் கொள்ளும் தகவல்களின் அந்தரங்கத் தன்மையைப் பாதுகாத்தல் வேண்டும். ஒரு சேவை பெறுநர் பற்றிய விடயங்களை, ஒருபொழுதும் இன்னொருவருக்கு வெளிப்படுத்தக் கூடாது.

- **நட்புரீதியான சேவை :-**
  சேவை பெறுநரை நோக்கி நட்புடையோராகுதல் அவசியம். நம்பிக்கையின் பேரில் விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்றுதல் என்பன இடம்பெறுவது இதன் மூலமாகவேயாகும். கிளினிக்கினை சேவை பெறுநருக்கு மகிழ்ச்சியான இடமாக மாற்றுவதற்கு, எவ்வேளையிலும் நடவடிக்கை எடுங்கள்.

■ **திறமையான சேவை :-**
சேவைகளைக் குறிப்பிட்ட வேளையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள். சேவையைப் பெறுவதற்குக் காத்திருக்கும் நேரத்தை முடியுமான அளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.

■ **அறிவூ ட்டல் / ஆலோசனை :-**
- ♦ தாய்நலம் / சேய்நலம் குறித்து அறிவூட்டல்.
- ♦ குடும்பத் திட்ட முறைகள் குறித்து அறிவூட்டல்.
- ♦ இரட்டைப் (கொண்டம்) பாதுகாப்புக் குறித்து அறிவூட்டல்.
- ♦ போஷாக்குக் குறித்து பயிற்சிப்பட்டறை நடாத்துதல்.
- ♦ வீட்டு வன்முறையைத் தவிர்ப்பதற்கும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது குறித்தும் அறிவூட்டல்.
- ♦ மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக, கிளினிக்குகளில் மட்டுமன்றி பாடசாலை, மக்கள் மைய நிலையங்கள், வேலைத் தலங்கள் முதலியவற்றை பயிற்சிப்பட்டறை நடாத்துவதற்குப் பயன்படுத்தலாம்.

■ சேவை வழங்குகையில் முன்அபிப்பிராயத்தைக் கைக்கொண்டு இயங்காது சேவை பெறுநருக்கு அவசியமான சகல விடயங்களையும் தெளிவுபடுத்தி, சேவை பெறுநரின் விருப்பத்தைப் பொறுத்துத் தேவையான சேவையை வழங்கவும்.

■ இளவயதினர் / திருமணமாகாதவர் மற்றும் தாரமிழந்த பெண், ஆண் சகலருக்கும் தேவையான சேவை மற்றும் ஆலோசனைகளைக் சமமாக வழங்கவும்.

■ சேவையை விரிவுபடுத்தல் :-
- ♦ சனத்தொகைச் செறிவின் அடிப்படையில் புது கிளினிக்குகளை ஏற்படுத்தல்.
- ♦ கிளினிக்குகளில் சேவைகளை விரிவுபடுத்தல்.
  உதாரணம்:- கர்ப்பிணிப் பெணணின் பராமரிப்பிற்கு மேலதிகமாக சுகவனிதையர் கிளினிக் மற்றும் சகல முறைகளையும் உள்ளடக்கிய குடும்பத் திட்டக் கிளினிக் என்று விரிவுபடுத்திக் கொள்ளல்.

காலம் 20 நிமிடம்

ஆண் பெண் சமூகநிலையின் காரணமாக ஏற்படும் இம்சைகளைக் குறைத்தலும் தவிர்த்தலும்

1. தலைப்பு :- ஆண் பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தலும் தவிர்த்தலும்

2. காலம் :- 6 மணித்தியாலம்

3. அடிப்படைக் கருத்துரை :- இம்சைகளைக் குறைத்தல்
இம்சைகளைத் தவிர்த்தல்

4. எதர்பார்க்கப்படும் திறமை :- ஆண் பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தல் மற்றும் தவிர்த்தலுக்குமான பொருத்தமான வழிமுறைகளை எடுத்தல்.

5. விசேட குறிக்கோள் / கற்கைக் குறிக்கோள்

I செயன்முறை - ஆண் பெண் சமூகநிலையினால் ஏற்படும் இம்சைகளை அடையாளம் காணுதல்.

II செயன்முறை- ஆண் பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தல் மற்றும் தவிர்த்தலுக்குமான சமூக வலியுறுத்தலுக்கான பங்களிப்புக்களைக் காட்டுதல்.

6. கற்பித்தல் / கற்றல் ஆதார உபகரணங்கள் :-
- ஊடுகாட்டி / ஊடுகாட்டித் தாள்
- மெகி பலகை / பேனா
- துண்டுப் பிரசுரம்
- ஆண் பெண் சமூகநிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளை வெளிப்படுத்தும் பத்திரிகைச் செய்தி
- சம்பவ ஆராய்வு (Case studies)

கற்பித்தல் முறை - இதற்கென பங்குபற்றுவோரின் முன் அறிவு, மனப்பாங்கு, திறன் மற்றும் அனுபவம் என்பவற்றுக்கு ஏற்ற பங்கேற்றல் முறையினைப் பயன்படுத்தல்.

- சிந்தனைச் சேர்க்கை முறை.
- பத்திரிகைகளில் இருந்து கிடைத்த விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கி அது பற்றி விசாரித்தல்.
- பங்குபற்றுவோரின் முன் வைப்பும் கலந்துரையாடலும்.

பிரவேசம் - கீழே குறிப்பிடப்படும் விடயத்தினைக் கையிலெடுத்து ஆக்கபூர்வமான பிரவேசத்தினைக் கைக்கொள்ளவும்.

- இம்சைகள் குடும்ப ஆரோக்கிய விருத்திக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனைக் காட்டுவதன் மூலம் பிரவேசியுங்கள்.
- பத்திரிகைகளில் இருக்கும் இது சம்பந்தமான சம்பவம் ஒன்றை வைத்து ஆரம்பித்தல்.
- வீட்டு வன்முறைகளின் தற்போதைய நிலைமையின் தொழிற்பாட்டினைச் சுட்டிக்காட்டுதல்.

(காலம் - 5 நிமிடங்கள்)

கற்றல் குறிக்கோள்-1

ஆண் பெண் சமூகநிலையினால் ஏற்படும் இம்சைகளை அடையாளம் காணுதல்.

வளவாளர், ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான பல்வேறு இம்சைகளைப் பற்றி கலந்துரையாடுவதன் மூலம், பங்குபற்றுவோரின் அறிவை விருத்திசெய்தல் வேண்டும். இம்சைகளில் உள்ள பயங்கர நிலை குறித்து பங்குபற்றுவோரிடத்தே மிகவும் நன்றாகத் தெளிவுபடுத்தல் இடம் பெற வேண்டும். இங்கே :-

- ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான இம்சைகளை வரைவிலக்கணப்படுத்தல்.
- வீட்டு வன்முறைகளை வரைவிலக்கணப்படுத்தல்.
- ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான இம்சைகளின் உள்நாட்டு வெளிநாட்டு நிலைமை(தரவுகள்) களை அடையாளம் காணல்.
- ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான இம்சைகளினால ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுதல்.

ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான பல்வேறு இம்சைகள்

வரைவிலக்கணம் -I

(BY United Nations Declaration- 1993)

பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட வாழ்விலோ ஆண் பெண் சமூகநிலையை அடிப்படையாகக் கொண்டு எந்தவிதமான செயல்கள் அல்லது செயற்பாடுகள் காரணமாக உடல்,உள, மற்றும் பாலியல் இம்சைக்கு, வேதனைக்கு, காயம் அல்லது தாக்குதலுக்கு பெண்கள் ஆளாதல் மற்றும் ஆளாக்கப்படுதல், பயமுறுத்துதல், பலாத்காரமாகவோ அல்லது வேண்டுமென்றோ பெண்ணின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்தல்.

வரைவிலக்கணம் -II

(BY Hay ward)

பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட வாழ்விலோ எந்த ஒரு தனிநபரது அல்லது குழுவினரது பாதிப்பான செயற்பாடுகளுக்கு பெண்கள் உட்படுவதன் மூலம் பெண்களை நோகச் செய்தல், வேதனை மற்றும் தாக்குதலுக்கு உட்படுத்தல் மற்றும் பயமுறுத்துதல் போன்று பாகுபாடு காட்டுதல். (சம்பிரதாயபூர்வமான பழக்க வழக்கங்களின் மூலம் மற்றும் அடிப்படை மனித உரிமை மீறல் மூலம்)

வீட்டு வன்முறை

அழுத்தத்துக்கு உட்படும் ஒருவர் மற்றும் அழுத்தத்துக்கு உட்படுத்தும் ஒருவர் ஆகியோரிடையே ஏற்படும் தனிப்பட்ட இயற்கையான தொடர்புகளின் பிரதிபலனாக யாராவது ஒருவர் உடல் ரீதியில் அல்லது உள ரீதியில் அழுத்தத்துக்கு உட்படுத்தப்படுவதாகும். இது வீட்டுச் சூழலில் மட்டுமே நடக்க வேண்டும் என்ற அவசியமற்றதுடன், வீட்டுக்கு வெளியிலும் இடம்பெறக் கூடியதுமாகும்.

ஆண் பெண் சமூகநிலையுடன் தொடர்பான இம்சைகள் பல்வேறு கலாசார, கோள, மத, மற்றும் பொருளாதார நிலைமைகள் யாவற்றிலும் தொற்றியிருக்கும் முழு உலகத்துக்கும், பொதுவான ஒரு பிரச்சினையாகும். இது மனித உரிமை பற்றிய பிரச்சினையாகவும் பொதுச் சுகாதாரம் பற்றிய பாரிய பிரச்சினையாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப் பிரச்சனை உலகம் பூராவும் பரந்து காணப்படுகின்ற, ஆனால் வெளிக் தெரியாத ஒன்றாகும்.

- ஐக்கிய அமெரிக்க ராஜ்யத்தில் ஒவ்வொரு வருடமும் 2.4 மில்லியன் பெண்கள் இம்சைக்கும் தாக்குதலுக்கும் ஆளாவதுடன், இனப்பெருக்க வயதில் உள்ள பெண்கள் அதிகமாக விபத்துக்களுக்கு ஆளாவதற்கான காரணமும் இதுவேயாகும்.

- ஐக்கிய அமெரிக்க ராஜ்யத்தில் 28 வீதமும், இங்கிலாந்தில் 25 வீதமும், பெண்கள் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது தமது துணைவனினால் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். (யுனிசெப் 2000)

- இங்கிலாந்தில் ஒவ்வொரு வருடமும், பெண்களில் 10 பேருக்கு ஒருவர் கடுமையான முறையில் தமது கணவன்மாரிடமிருந்து இம்சைக்கும் தாக்குதலுக்கும் உள்ளாக்கப்பட்டிருப்பதோடு, ஐக்கிய அமெரிக்க ராஜ்யத்தில் ஒவ்வொரு 15 செக்கனுக்கு ஒரு பெண் தமது கணவன்மாரினால் தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

  (Epstein 1998)

உலக சுகாதார நிறுவனத்தின் மூலம் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகளின்படி (கீழே குறிப்பிடப்படும் 10 நாடுகளில் 24000 பெண்களின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்பட்டது)

- வங்காள தேசம்
- பிரேஸில்
- எதியோபியா
- ஜப்பான்
- பேரு ராஜ்யம்
- நமீபியா
- செமோவா ராஜ்யம்
- சேர்பியா
- தாய்லாந்து
- தன்சானியா


துணைவனினால் ஏற்படுத்தப்பட்ட உடலியல் / பாலியல் இம்சைகளின் நிலை
80
70
60
50
40
30
20
10
0
27 29
10
34 37
14
31 36
17
50 52
23
62 69
47
23 30
41
34 47
29
33 41
23
47 56
31
Brazil C
Brazil p
Namibia C
Peru C
Peru P
Thailand C
Thailand P
Tanzania C
Tanzania P
% women who have ever experienced physical partner violence
% women who have ever experienced sexual partner violence
% women who have experience physical and/or sexual violence


Proportion of women reporting poor health and association with reported violence
0 5 10 15 20 25 30
% women who report their current health status as "poor" or "very poor"
Brazil Cap 9 4
Brazil Prov 28 14
Peru Cap 9 5
Peru Prov 19 11
Thailand Cap 20 13
Thailand Prov 27 18
Namibia 6 3
Japan 6 3
ever physically or sexually abused by partner
no abuse by partner



மேற்குறிப்பிட்ட தரவுகளின்படி

- உலகம் முழுவதும் பெண்களில், மூவரில் ஒருவர் தமது துணைவனினால் இம்சைக்கும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் உட்படுகின்றனர்.
- உடலியல் / பாலியல் இம்சைகள் பெண்களது சுகாதார நிலைமை மோசமாவதற்கும், உடல் பலவீனத்துக்குமான பிரதான காரணியாகவும் அமைகிறது.



இந்த DALYs ஆராய்வின்படி பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வீட்டு வன்முறை காரணமாக ஏற்படும் மரணம் மற்றும் உடல் ஊனங்கள், புற்று நோய் காரணமாக ஏற்படும் மரணம் மற்றும் உடல் ஊனங்களைவிட அதிகமாகக் காணப்படுகிறது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி :-

- பெண்கள் அனுபவிக்க நேரும் இம்சைகள் சகல பிரதேசம், சகல சமூகநிலை, சகல இனத்தைச் சார்ந்த மக்கள் இடையேயும் அறிக்கையிடப்படுகின்றன.
- இம்சைக்குள்ளாகும் அதிகமான பெண்கள் 20 - 44 வயதுக்கிடைப்பட்டவர்களாவர்.
- இந்த இம்சைகள் இடம்பெறுவது கணவர்மார், உறவினர், அயலவர், மற்றும் ஏனைய வேறுவகையில் தொடர்புபட்டவர்களினாலேயேயாகும்

2006ம் வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையின்படி

இங்கே கொழும்பு மாவட்டப் பெண்கள் தமது துணைவனினால் இம்சைக்கு ஆட்படும் விதம் குறித்து ஆராயப்பட்டது.

18 - 40 வயதுக்கிடைப்பட்ட திருமணமான, பெண்கள் 750 பேரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விற்கென இதற்கு முன்னர் உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் பயன்படுத்திய கேள்விக் கொத்து (WHO questionnaire) பயன்படுத்தப்பட்டது.

முடிவுகளின்படி:-

- தமது வாழ்நாளில் உடல் ரீதியான இம்சைக்கு ஆளானோர் 34.4 வீதமாகும்.
- கடந்த ஒரு வருடத்திற்குள் உடல் ரீதியான இம்சைக்கு ஆளானோர் 8.8 வீதமாகும்.
- தமது வாழ்நாளில் மிகவும் கடுமையான முறையில் உடல் ரீதியான இம்சைக்கு ஆளானோர் 19.8 வீதமாகும்.

காலம் - 20 நிமிடங்கள்

வாழ்க்கைக் காலம் முழுவதற்கும் ஆண் பெண் சமூகநிலையை அடிப்படையாகக் கொண்ட இம்சை தாக்கம் செலுத்தும் முறை.

பிறப்புக்கு முந்திய நிலையில் :-

- பலாத்காரம் காரணமாகக் கர்ப்பம் தரித்தல் (வன்புணர்வு)
- ஆண் பெண் பால் நிலையை அடிப்படையாகக் கொண்டு பால் பேதம் காரணமாகப் பெண் குழந்தையாயின் கர்ப்பச் சிதைவுக்குட்படுத்தல்.
- கர்ப்ப காலத்தில் தாய் தாக்குதலுக்குட்படல்.

குழந்தைப் பருவத்தில் :-

- போஷாக்கும், சுகாதாரப் பராமரிப்பும் பெண் குழந்தைகளுக்குக் குறைவாகக் கிடைத்தல்.
- உடல் உள ரீதியில் துஷ்பிரயோகத்துக்குட்படல்.

பிள்ளைப் பருவத்தில் :-

- போஷாக்கும் சுகாதாரப் பராமரிப்பும் பெண் பிள்ளைகளுக்குக் குறைவாகக் கிடைத்தல்
- பெண் பாலுறுப்பினை விகாரப்படுத்தல் - (Female Circumcision /Genital Mutilation)
- கல்வி பெறும் சந்தர்ப்பம் குறைவாகக் கிடைத்தல்.
- சிறுவர் வேலைக்கமர்த்தல், அல்லது பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல்.
- குடும்ப உறுப்பினர் அல்லது விருந்தினர்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படல்.

யௌவனப் பருவத்தில் :-

- கல்வி பெறும் சந்தர்ப்பம் குறைவாகக் கிடைத்தல்.
- பொருளாதாரக் காரணங்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படல்.
- வேலை செய்யுமிடத்தில் துஷ்பிரயோகத்துக்குட்படல்.
- பாலியல் அழுத்தத்துக்குட்படுத்தல்
- பலாத்காரமாக பாலியல் தொழிலில் (Commercial Sex Workers) ஈடுபடுத்தல்.
- ஆட்கடத்தலுக்குட்படுத்தல் (Trafficking)

இளம் பருவமும் திருமண வாழ்வும் :-

- உளத் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தல்
- கணவனால் மனைவி துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படல். (துணைவனால் துணைவி உடல், உள, பாலியல் மற்றும் பொருளாதார ரீதியில்)
- வேலை செய்யுமிடத்தில் துஷ்பிரயோகத்துக்குட்படல்.
- ஊனமுற்ற நிலையிலுள்ள பெண்கள் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படல்.
- திருமண வாழ்விலும்கூட பலாத்காரம் செய்தல்.
- சீதனம் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள்
- வன்புணர்வுக்குட்படல்
- துணைவனால் துணைவி மரணத்துக்காளாதல்.

வயோதிபப் பருவத்தில் :-

- விதவைகள் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படல்.
- வயோதிபப் பெண்கள் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படல்.

இலங்கைச் சமூகத்தில் காணக்கிடைக்காத உலகில் வேறு நாடுகளில் பரவலாகக் காணப்படும் சில இம்சைகள் கீழே தரப்படுகின்றன.

- அசிட் வீச்சு (Acid)
- உடன் கட்டையேறல்
- மதக் காரணங்களுக்காகப் பலியிடல்
- சீதனப் பிரச்சனை காரணமாக கொலை அல்லது மரணம்.



ගැටළු වල බරපතලකම හිංසනයෙහි ප්‍රමාණයට සමානුපාතිකවේ. (කාලය විනාඩි 10යි)

அதிகாரம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான வட்டம்

ஆண் பெண் சமூகநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த இம்சைகளை மிகவும் ஆழமாக கீழே காணப்படும் அதிகாரம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான வட்டத்தின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். பெண் ஒருத்தியின் வாழ்க்கை முழுவதும் துணைவனாலும் சமூகத்தினாலும் அதிகாரத்துக்குட்படுத்தி இமசைக்குள்ளாக்கும் முறைகள் இந்த வகையில் பிரதிபலிக்கிறது.

இம்சைகள்



Source: Developed by the Domestic Abuse Intervention Project, 202 East Superior Street Duluth, Minnesota 55802 USA

பெண் ஆண் சமூகநிலையுடன் இணைந்த இமசைகளுடன் தொடர்பான இயல்பான சூழல் அமைப்பு (Ecologigal framework)



மேற்குறிப்பிட்ட அமைப்புமுறை ஹெய்ஸ் என்பவரினால் முன்வைக்கப்பட்டதொன்றாகும். (Heise L 1998) அவர் ஆண் பெண் சமூகநிலையை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளை உருவாக்கும் 4 காரணிகளை விபரித்துள்ளார்.

தனிப்பட்ட காரணிகள் (Individual)

ஒருவரினுள்ளேயே உள்ள சக்கரமாக இது இருப்பதுடன் அவரது நடத்தை இயல்புகள் மற்றும் அனுபவங்கள் இதற்கென அழுத்தம் கொடுக்கும் முறைகள் இதில் பிரதிபலிக்கும்.

உதாரணம் - பிள்ளைப் பருவத்தில் தனது பெற்றோரிடையே வீட்டு வன்முறை காணப்படுதல் மற்றும் அனுபவம்.

- பிள்ளைப் பருவத்தில் துஷ்பிரயோகத்துக்கு உட்படல்.
- இயல்பிலேயே அவன் / அவள் குழப்பக்காரனாக இருத்தல்.

தொடர்பு - உறவு (Relationship)

தனிப்பட்ட உறவுகளில் உள்ள பலவீனம் / பிரச்சினை / விகாரநிலை இம்சை ஏற்பட அழுத்தமாகும்.

சமூகம் (Community)

தனிநபருடன் நெருக்கமான கூட்டுக்கள் சமூகம் என அயைாளப்படும். உதா:- குடும்பம், வேலைத்தலம், பாடசாலை, நண்பர் குழுக்கள் முதலியன.

இந்த சமூகம் இம்சைகளை அனுமதிக்குமானால், அது சாதாரணமானது எனக் கணிப்பிடுமானால் அது இம்சை ஏற்படுவதற்கான அழுத்தம் கொடுக்கும் காரணியாகும்.

சமுதாயம் (Society)

இது மேற்குறிப்பிட்ட சகல வட்டத்தினரும் உள்ளடக்கப்படும் விசாலமான வட்டமாகும். இங்கே கருதப்படுவது கூட்டான சமுதாயமாகும். சமுதாயம் ஆண் பெண் சமூகநிலையுடன் இணைந்த இம்சைகளை சாதாரணமானதென ஏற்றுக் கொள்ளுமானால், அதனை வெறுக்கவில்லையானால் அது இம்சைக்குப் பலமளிப்பதாயமையும். அப்படியான சமுதாயத்தில் இம்சைகள் பரவலாகக் காணப்படும்.

இதன்படி இம்சைகளுக்கு அடிப்படையாகின்ற பிரதான காரணிகள் சில வருமாறு :-

- பிள்ளைப் பருவத்தில் தனது பெற்றோரிடையே வீட்டு வன்முறை காணப்படுதல் மற்றும் அது பற்றிய அனுபவம்.
- பிள்ளைப் பருவத்தில் துஷ்பிரயோகத்துக்கு உட்படல்.
- இயல்பிலேயே குழப்பக்கார நபராக இருத்தல்.
- ஆணாதிக்கம்.
- திருமண வாழ்வில் ஏற்படும் தடுமாற்ற நிலை.
- மதுபானம் / போதைப் பொருள் பாவனையும் அடிமையாதலும்.

இலங்கைப் பெண்கள் தாங்கள் முகம் கொடுக்கும் ஆண் பெண் சமூகநிலையுடன் இணைந்த இம்சைகளை அதிகளவில் தாங்கிக் கொண்டு வாழ்கின்றனர். இதற்கு அடிப்படையாகின்ற காரணிகள் சில வருமாறு :-

- வெட்கம், பயம் மற்றும் தான் பிழை செய்கின்றேனா எனும் உணர்வு.
- பொருளாதார ரீதியில் தான் கணவனில் தங்கியிருப்பதனால் எதிர்காலத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படுமோ எனும் பயம்.
- குடும்ப அமைப்பினைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு.
- சமுதாய மற்றும் கலாசார அழுத்தம்.
- குழந்தைகளுக்கு அவமானம் ஏற்படுமோ என்ற உணர்வு.

கற்றல் குறிக்கோள்-2

ஆண் பெண் சமூக நிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தல் மற்றும் தவிர்த்தலுக்குமான இணைப்பு நடவடிக்கைகளையும் பொருத்தமான தகுந்த செயற்பாடுகளையம் எடுத்தல்.

ஆண் பெண் சமூக நிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைப்பதற்காக இதுவரை பயணித்த பாதையின் முக்கியமான மைல் கற்கள்

- 1931 - சர்வஜன வாக்குரிமை பற்றிய உரிமையைப் பெற்றுக் கொடுத்தமை
- 1938 - சுதந்திரமான கல்வி பற்றிய சட்டம் நிறைவேற்றப்படது
- 1978 - இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஆண் பெண் பால்நிலை வேறுபாடு காட்டக் கூடாது என ஏற்றுக் கொள்ளப்பட்டமை
- 1978 - இலங்கை மகளிர் பணியகம் உருவாக்கப்பட்டமை
- 1981 - பெண்களை வேறுபடுத்திப் பார்ப்பதனைத் தவிர்க்கும் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (CEDAW- Convention on the elimination of all forms of discrimination against women)
- 1983 - மகளிர் விவகார அமைச்சு உருவாக்கப்பட்டமை
- 1993 - பெண்களுக்கு எதிரான இம்சைகளைத் தவிர்ப்பதற்கான வியன்னா பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திட்டது. ஆண் பெண் சமூக நிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைத் தவிர்ப்பதற்கு இலங்கையின் உற்சாகமான பங்களிப்பு, சர்வதேச தளத்தில் உள்ளதென்பதனை இது பிரகடனப்படுத்துகிறது.
- 1993 - இலங்கை அரசினால் பெண்கள் பிரகடனம் (Womens Charter) ஸ்தாபிக்கப்பட்டது.
- 1993 - மகளிர் விவகாரம் குறித்த தேசிய கமிட்டி (National committee on Women) உருவாக்கப்பட்டது.
- 1995 - குற்றவியல் சட்டக்கோவையில் (Peal Code) திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.
- 2000 - பொலீஸ் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார / முறைப்பாடு தொடர்பாகப் பிரத்தியேகமான பிரிவுகள் உருவாக்கப்பட்டமை.
- 2004 - 'திரி தரு பியச' எனும் திட்டம் உருவாக்கப்பட்டது.
- 2005 - வீட்டு வன்முறையைத் தவிர்க்கும் சட்டம் பாராளுமன்றம் ஊடாக நிறைவேற்றப்பட்டது

ஆண் பெண் சமூக நிலையினை அடிப்படையாகக் கொண்ட இம்சைகளைக் குறைத்தல் மற்றும் தவிர்த்தலுக்குமென தொழிற்படும் அரசமட்ட அமைப்புக்களில் சில பின்வருமாறு :-

1. மகளிர் விவகார அமைச்சு, 177, நாவல றோட், கொழும்பு - 05
   தொலை பேசி:- 011 2598371, 2591297 ஏனைய ஆலோசனை மத்திய நிலையங்கள் - ரத்மலான, கட்டுநாயக, ஹபராதுவ.
2. இலங்கை மகளிர் பணியகம், 11 / 1, மலலசேகர மாவத்தை, கொழும்பு - 07
   தொலை பேசி:- 011 2595841.
3. சுகாதார அமைச்சு, சுவசிரிபாய, கொழும்பு - 10.
4. சமூக சேவைகள் அமைச்சு.
5. சிறுவர் கண்காணிப்பு மற்றும் பராமரிப்புத் திணைக்களம், 95, சேர. சிற்றம்பலம ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02, தொலைபேசி - 011 2327600, 2448577.
6. கல்வி அமைச்சு, இசுருபாய தொலை பேசி:- 011 2785141, 2785142.
7. நீதிச் சேவை ஆணைக்குழு - நீதி மன்றங்கள் - தொலை பேசி:- 011 2451159.
8. சட்ட உதவி ஆணைக்குழு - உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, ஹல்ப்ஸ்டொப், கொழும்பு- 12, தொலை பேசி:- 011 2433618.
9. பொலீஸ் திணைக்களம், இலங்கைப் பொலீஸ் மூலஸ்தானம், கொழும்பு-01
   தொலை பேசி:- 011 2421111, 2433333.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, Child Abuse Hotline
தொலை பேசி :- 011 2444444

பொலீஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம்

- சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக நிவாரணப் பிரிவு, இல:- 25, சேர். பாரன ஜயதிலக மாவத்தை, கொழும்பு - 01

- சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொரல்ல பொலீஸ் நிலையம், 205/1, காசல் வீதி, கொழும்பு -08, தொலை பேசி:- 011 2677903

அரச சார்பற்ற நிறுவனங்கள்

1. Women In Need (WIN) No-20, Deal place, Colombo -03
   Telephone - 011 2665870, 2671411, 4615549
   இதன் மத்திய நிலையங்கள் பல உள்ள இடங்கள்
   - அனுராதபுரம் - 025 2225708
   - கண்டி - 081 2203246
   - மாத்தறை - 041 5814004
   - பதுளை - 055 2224395
   - யாழ்ப்பாணம் - 021 22296671
   - புத்தளம் - 032 5672161
   - தேசிய வைத்தியசாலை - அவசர விபத்துப் பிரிவு
   - அனுராதபுரம் வைத்தியசாலை - விடுதி இல:- 4, 7, 11, 17
   - குருணாகல் போதனா வைத்தியசாலை, - சங்ஹித - ஆலோசனை நிலையம்
   - பேராதனை போதனா வைத்தியசாலை, விடுதி இல:- 17
   - பதுளை வைத்தியசாலை
   - த சொய்சா பெண்கள் வைத்தியசாலை

2. சர்வோதய, 98, ராவத்தாவத்தை றோட், மொரட்டுவ
தொலை பேசி:- 011 2647159, 2655255
3. குடும்பத் திட்ட இயக்கத்தின் இளைஞர் மற்றும் இனப்பெருக்க சுகாதாரப் பிரிவு, 37/ 27, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு -07
தொலை பேசி:- 011 2584153, 2584157
4. சிறிலங்கா சுமித்ரயோ, 60/7, ஹோர்ட்டன் பிளேஸ், கொழும்பு - 07
தொலை பேசி:- 011 2682535
5. பெண்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், 61, முல்கம்பளை றோமட், கண்டி
தொலை பேசி:- 081 234511
6. குடும்பப் புனர்வாழ்வு மத்திய நிலையம், 73, கிரகரி றோட், கொழும்பு - 07
7. இளம் பெண்களின் கிறிஸ்தவ அமைப்பு (YWCA), 393, !னியன் பிளேஸ், கொழும்பு - 02, தொலை பேசி:- 011 2324694, 2423143, 2324181
8. அல்கஹோல் மற்றும் மருந்து தகவல் மத்திய நிலையம், 40/ 18, பார்க் வீதி, கொழும்பு - 05, தொலை பேசி - 011 2584416, 2592315
9. மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திபற்றிய சட்டத்தரணிகள் சங்கம், 225 1/1, கொட்டா றோட், கொழும்பு - 08, தொலை பேசி - 011 2686180, 2687665
10. எடிக் நிறுவனம், 40/ 18, உத்யான றோட், கொழும்பு - 05, தொலை பேசி - 011 2508484
11. மெல் மதுர, 60, ஹோர்ட்டன் பிளேஸ், கொழும்பு -07,
தொலை பேசி - 011 2694665, 2693460
12. சஹனய, 96 / 20, கிதுல்வத்த றோட், கொழும்பு - 08, தொலை பேசி - 011 2685960
13. திரிபியச மத்திய நிலையம், இல :- 1 / 17, ஸ்வர்ணா றோட், கொழும்பு - 06,
தொலை பேசி - 011 2585558

கிராமிய மட்டத்தில் இம்சைகளைக் குறைப்பதற்கான உதவிகளைப் பெறக்கூடியவர்கள்

- வீட்டுப் பெரியவர்கள், நண்பர்கள்
- கிராமசேவை அதிகாரிகள்
- பொலீஸ் அதிகாரிகள்
- பாடசாலை அதிபர்கள்/ ஆசிரியர்கள்
- மத ஸ்தாபனங்களின் முக்கியஸ்தர்கள்
- பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள்-(இளைஞர் இயக்கங்கள், பெண்கள் சங்கங்கள்)

(காலம்- 10 நிமிடங்கள்)

வீட்டு வன்முறை தவிர்த்தல் சட்டமூலம்
இந்தச் சட்ட மூலம் இலங்கையின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.

இது 2005ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சரீர அழுத்தத்துக்கு உட்படுத்தல் என்பது

அழுத்தத்துக்கு உட்படுத்தப்படுபவரது, உடலுக்குச் செய்கின்ற செயற்பாடாகும்.
குற்றவியல் சட்டக் கோவை 16ம் சரத்தின்படி உடல் சம்பந்தமான குற்றங்கள் சிலவாயின் :-

உதா. பிரிவு - 304 - பெண்ணொருவரது விருப்பமின்றி கர்ப்பச் சிதைவு செய்தல்
பிரிவு - 293 - கைமோச மனிதக் கொலை
பிரிவு - 308(ஆ) - பிள்ளைகளை கொடூரத்துக்குட்படுத்துதல்
பிரிவு - 340 (ஆ) - பலாத்காரம்
பிரிவு - 345 பாலியல் தொல்லை செய்தல்

இந்தச் செயற்பாடுகள் யாவும் குற்றங்கள் என குற்றவியல் சட்டக் கோவை சொல்கிறது.

மன அழுத்தத்துக்கு உட்படுத்தல் என்பது உணர்ச்சிபூர்வமாக ஏசுதல் மனஅழுத்தத்துக்கு உரியதாகும். பல வழிகளில் இது இடம்பெறலாம்.

- வசனங்களைப் பாவிப்பதனால் - வெட்கம், அவமானம், கடுமையான சொற்கள் முதலியன.
- எந்த வசனங்களும் இன்றிய திடீர் அழுத்தம் - கணவன் மனைவிக்குத் தெரியாது சொத்துக்களை விற்றல், வீட்டிலிருந்து வெளியேற்றல் முதலியன.

வீட்டு வன்முறையைத் தவிர்ப்பதற்கு வழக்குத் தொடர்வது எந்த நீதிமன்றத்தில்?
நீதவான் நீதிமன்றம்

இந்தச் சட்ட மூலத்தின் கீழ் பாதுகாப்புக் கட்டளை யாரினால் கோரப்பட வேண்டும்?
அழுத்தத்துக்குபட்டவர் வளர்ந்தவராயின்

- அழுத்தத்துக்குபட்டவரினால்
- பொலீஸ் அதிகாரி ஒருவரினால்

அழுத்தத்துக்குபட்டவர் ஒரு பிள்ளையாயின்,

- பிள்ளையின் பெற்றோரில் ஒருவரினால்
- பாதுகாவலரினால்
- பிள்ளை வாழும் இடத்தின் பதிவு செய்யப்பட்ட ஒருவரினால்
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் (இது எழுத்தில் இருக்க வேண்டும்)
- பொலீஸ் அதிகாரி ஒருவரினால்

அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களுக்கு பாதுகாப்புக் கட்டளையைக் கோரும் உரிமை கிடையாது.

இருந்தும் அழுத்தத்துக்குபட்டவர் சார்பாக சட்ட உதவியை வழங்குவதற்கு அந்த நிறுவனங்களுக்கு உரிமையுண்டு.

வீட்டு வன்முறை தவிர்த்தல் சட்டமூலத்தின் பிரகாரம் எந்த நபருக்கு எதிராக நீதி கோர முடியும்?

இதற்கு ஆண் பெண் பேதம் கிடையாது.
வயது பேதம் கிடையாது.

இந்தச் சட்ட மூலத்தின் கீழ் கீழ்க் குறிப்பிடப்படும் உறவுத் தொடர்புகளுக்குரியவர்கள் அந்த உறவுத் தொடர்பினைப் பயன்படுத்தி ஒரு பகுதியினர் மற்றைய பகுதியினரை வீட்டு வன்முறைக்குட்படுத்துவாராயின் அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

- கணவன் அல்லது மனைவி
- முந்திய விவாகத்தின் கணவன் அல்லது மனைவி
- தன்னுடன் ஒன்றாக வாழும் துணைவன் அல்லது துணைவி

அழுத்தத்துக்குபட்டவரது அல்லது விவாகத்தின் துணையினது அல்லது முந்திய விவாகத்தின் துணையினது அல்லது தன்னுடன் ஒன்றாக வாழும் துணையினது உறவுகளால் ஏற்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற உறவினர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

- தகப்பன், தாய், பாட்டன், பாட்டி, சித்தி, சித்தப்பா
- மகன், மகள், பேரன், பேத்தி, பெறாமகன், பெறாமகள் (Step son and Daughter)
- சகோதரன், சகோதரி, ஒன்றுவிட்ட சகோதரன், ஒன்றுவிட்ட சகோதரி,
- பெற்றோரது சகோதரன், சகோதரி,(உதா, மாமா, மாமி, சித்தப்பா)
- சகோதரன் அல்லது சகோதரியின் பிள்ளைகள்
- பெற்றோரது சகோதரன் அல்லது சகோதரியின் பிள்ளைகள

இடைக்காலப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கட்டளையினை வழங்குதல் சிவில் நடவடிக்கையாகும். இது குற்றவாளியின் ஒப்புதல் இன்றியே பெற்றுக் கொடுக்கப்படுகிறது. பிரதிவாதியினைக் குற்றவாளியாகக் கொண்டு சிறை தண்டனை விதித்தல் இங்கே எவ்வகையிலும் இடம்பெறுவதில்லை.

இடைக்காலப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கட்டளையினை மீறுதல் பற்றி பிரதிவாதியினைக் குற்றவாளியாகக் கண்டால், நீதவான் நீதிமன்றத்தில் விதிக்கக்கூடிய தண்டனைகள் :-

- 10,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது ஒரு வருட காலத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதித்தல்
- இது கடுழியம் அல்லது சாதாரண ஊழியத்துடனாகவிருக்கலாம் என்பதோடு அபராதம் சிறைத்தண்டனை இரண்டையும் விதிக்கவும் முடியும்.

இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை என்பது :-

நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்படும். இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை பாதிக்கப்பட்டவரது பாதுகாப்புக்காக வழங்கப்படுகிறது. இந்தக் கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் அதன் நோட்டீஸ் (அறிவிப்பு) பிரதிவாதியிடம் கையளிக்கப்பட வேண்டும். இடைக்காலப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் அல்லது வழக்கு முடிவடையும் வரை பிரதிவாதியினால் பாதிக்கப்பட்டவருக்கு இடம்பெறும் வீட்டு வன்முறைகள் தவிர்க்கப்படும்.

இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையொன்று வழங்கப்படுவதன் முக்கியத்துவம்

- இது பாதுகாப்புக்கென வழங்கப்படும் உடனடித் தீர்வாகும்.
- பாதிக்கப்பட்டவரது பாதுகாக்கப்படுதல் இதனது குறிக்கோளாகும்.
- பிரதிவாதியினது பக்கத்தினைக் கருத்தில் கொள்ளாது இங்கே கட்டளை வழங்க முடியும்.
- பாதிக்கப்பட்டவரது அல்லது அவரது பக்கச் சாட்சிகளை விசாரிக்காமலும் இங்கே கட்டளை வழங்க முடியும்.

பாதுகாப்புக் கட்டளை என்பது :-
இந்தக் கட்டளை நீதிமன்றத்தால் வழங்கப்பட வேண்டும். இது 12 மாத காலத்துக்கு வழங்கப்பட முடியும். இதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. பிரதிவாதி வன்முறையாளராகப் பாதிக்கப்பட்டவருக்கு பிரச்சினை கொடுக்கவில்லை என்பதனை நீதிமன்றம் உணருமானால், கட்டளையை நீக்கிக் கொண்டு இரு பகுதியினரையும் சமாதானமாவதற்கு சந்தர்ப்பம் வழங்கும். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்படும் போது பாதுகாப்புக் கட்டளை பலமிழக்கிறது. இடைக்காலப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கட்டளையை மீறும்போது பிரதிவாதிக்கு நீதவான் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்க முடியும்.

பாதுகாப்புக் கட்டளை எவ்வளவு காலத்துக்கு வழங்கப்படலாம்?
12 மாதங்களுக்கு, அதாவது ஒரு வருடத்துக்கு

இதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. பிரதிவாதி வன்முறையாளராகப் பிரச்சினை கொடுக்கவில்லையானால் கட்டளையை நீக்கிக் கொள்ள முடியும்.

வீட்டு வன்முறை தவிர்த்தல் சட்டமூலத்தின் பிரகாரம் நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கக் கூடிய நிவாரணங்கள்.

அழுத்தத்தை உருவாக்குபவரினால் ஏற்படும் வீட்டு வன்முறையைத் தவிர்ப்பதற்குப் பாதுகாப்புக் கட்டளையைக் கோர முடியும். இதற்கு மேலதிகமாக அழுத்தத்துக்கு ஆளானவரது ஆரோக்கியம் மற்றும் நலன் சம்பந்தப்பட்ட ஏதாவது கட்டளைகளையும் வழங்குவதற்கு இடமுண்டு.

பாதுகாப்புக் கட்டளையைப் பெறுவதற்கு வீட்டு வன்முறையொன்று இடம்பெற்றிருக்க வேண்டியது அவசியமா ?
இல்லை

அழுத்தத்துக்கு ஆளான ஒருவருக்கு:-

- வீட்டு வன்முறையொன்று இடம்பெற்றிருக்கும் பொழுது (கடந்த காலத்தில்)
- வீட்டு வன்முறையொன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது (நிகழ்காலத்தில்)
- வீட்டு வன்முறையொன்று இடம்பெறக் கூடிய நிலைமையொன்று இருக்கும் பொழுது (எதிர்காலத்தில்)

ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் இந்தப் பாதுகாப்புக் கட்டளையைக் கோர முடியும்.

உதா:- மரண அச்சுறுத்தலுக்கு ஆளாகும்போது, அச்சுறுத்தலுக்கு ஆளான நபர் ஒருவர் இந்தக் கட்டளையைக் கோர முடியும்.

இது போன்ற வழக்கொன்றினை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு வழக்கின் பிரதிகள் 2 அவசியமாகும். இது சம்பந்தமாக பொலஸில் முறைப்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை. இருந்தும் தனக்கு விருப்பமானால் அப்படிச செய்யலாம்.

விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்று துண்டுப் பிரசுரத்தில் இருக்கின்றது.

இடைக்காலப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கட்டளையொன்றினை வழங்கியதன் பின்னர் நீதிமன்றத்தால் பின்பற்றப்படும் நடைமுறை :-

பிரதிவாதியினால் நீதிமன்ற ஆணை நிறைவேற்றப்படுகின்றதா எனக் கண்காணித்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி, கீழே குறிப்பிடப்படுபவர்களில் யாராவது ஒருவருக்கு நீதிமன்றம் கட்டளை வழங்க முடியும்.

- சமூக சேவை உத்தியோகத்தர்
- குடும்ப ஆலோசகர்,
- கண்காணிப்பு உத்தியோகத்தர்
- குடும்ப நல உத்தியோகத்தர்
- சிறுவர் உரிமை அபிவிருத்தி செய்யும் உத்தியோகத்தர்

பிரதிவாதியினது அல்லது பாதிக்கப்பட்டவரது பெயர், ஊர் மற்றும் அடையாளங்கள் வெளிப்படும் வண்ணம் ஏதாவது விடயங்களை அச்சேற்றுதல் அல்லது பிரபல்யப்படுத்தல் கூடாது. ஆப்படிச் செய்தால் 2 வருட காலச் சிறைத் தண்டனைக்கு ஆளாக நேரிடும். வீட்டு வன்முறை சட்டமூலத்தின் மூலம் இப்படியான விடயதானங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது குடும்பப் பிரச்சினைகளின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படுவதற்காகவேயாகும்.

(காலம் :- 40 நிமிடங்கள்)

சுகாதார ஊழியர்களாக வீட்டு வன்முறையை அதிகரிப்பதற்கு எங்களை அறியாமலேயே சில சந்தர்ப்பங்களில் நாம் வழிவகுக்கலாம். வன்முறைக்கு ஆளாகும் ஒருவரது இம்சைகளை மேலும் அதிகரிப்பதற்கன்றி, குறைப்பதற்கோ அல்லது தவிர்ப்பதற்கோ நாம் எல்லோரும் வகை செய்ய வேண்டும்.

ஆபத்தான நிலை அதிகரிப்பதற்கு சுகாதார ஊழியர் பங்களிப்பு

சுகாதார ஊழியர் வீட்டு வன்முறையை அடையாளம் காண்பதற்கும் அதனைத் தவிர்ப்பதற்கும் தீவிரமாகப் பங்களிப்புச் செய்யும் பொழுது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மிகவும் நடுநிலையுடன் நின்று காரியமாற்ற வேண்டும்.

வீட்டு வன்முறையைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

வீட்டு வன்முறை என்பது மிகவும் ஆழமாகப் புரையோடிப்போயுள்ள பிரச்சினையாதலால், சடுதியாக இதனை நீக்குவதென்பது மிகவும் சிரமமான காரியமாகும். இருந்தும் இந்தப் பிரச்சினை குறித்த புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்ளுதல் உண்மையான மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு வேண்டிய உடன்பாட்டினை நோக்கிய முதல் தடமாக அமையும். வீட்டு வன்முறை பற்றி சமூகத்தைப் புரிந்துணரவூட்டும் தீவிரமான தேவைப்பாடு எப்பொழுதையும் விட இன்று அதிகமாக வெளிப்பட்டு நிற்கிறது. அறிவூட்டும் சகல முயற்சிகளுக்குள்ளும் பெண் ஆண் சமூகநிலையின் மீது குடும்பத்தினுள்ளும் சமூகத்தினுள்ளும் அடிப்படையாக அமைய வேண்டிய சமத்துவமும் நியாயமும் பற்றிய அறிவூட்டலும் உள்வாங்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் சகல நிகழ்ச்சித்திட்டங்களும் வன்முறையை முழுவதுமாய் நிராகரிக்கின்ற பரம்பரையினை உருவாக்குவதனைத் தமது குறிக்கோளாய் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் பெண் ஆண் சமூகநிலையுடன் சம்பந்தப்பட்ட இம்சைகளை இல்லாதொழிப்பதற்கு, பல்வேறு காலகட்டத்தில் செயற்படுகின்ற பரந்துபட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

வீட்டு வன்முறையைத் தவிர்ப்பதற்கு சுகாதார சேவையாளர்களாக தலையிடுவதற்கான பாரிய பொறுப்பு எங்களுக்குண்டு.

- மக்கள் சுகாதார சேவையாளர்களாக பெண் ஆண் சமூகநிலையினால் ஏற்படும் சண்டை, மற்றும் வீட்டு வன்முறையை முதலில் கண்காணிப்பது நாங்களே.

- சமுதாயமொன்றில் பெண்களும் ஆண்களும் மக்கள் சுகாதார சேவையாளர்களான எங்களுடன் வைத்திருக்கும் நம்பிக்கையுடனான நெருக்கமான தொடர்பு காரணமாக அவர்களது துயரங்கள் நிறைந்த மனதினை, எம்மைச் சந்தித்துத் திறந்து வெளிப்படுத்துகின்றனர்.

- பெண் ஆண் சமூகநிலையினால் ஏற்படும் சண்டை, மற்றும் வீட்டு வன்முறை சுகாதார அடிப்படையில் மிகவும் மோசமான அழுத்தங்களை ஏற்படுத்தி, முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தையும் பாதிப்புக்குள்ளாக்குவதனால் நாம் அதனைத் தவிர்ப்பதற்கு முன்வர வேண்டியது அவசியம்.

- பெண் ஆண் சமூகநிலையினால் ஏற்படும் சண்டை, மற்றும் வீட்டு வன்முறை சுகாதாரத்தின் மீது ஏற்படுத்தும் மோசமான அழுத்தங்கள் பற்றிச் சமூகத்துக்கு அறிவூட்டுவதற்கான தேவை சுகாதார சேவையாளர்களான எமக்கு இருக்கின்றது.

- சுகாதார சேவையாளர்களான நாம் தற்போது மக்களது நம்பிக்கையை வென்றிருக்கின்றோம். ஆகையால் சண்டை, மற்றும் வீட்டு வன்முறையை ஒழிப்பதன் நன்மையான விளைவுகளைப் பற்றி சமூகத்தை விழிப்புணரவூட்டி அதற்கெனத் தயார் செய்தல் ஏனையோரைவிட எமக்கு அவ்வளவு சிரமமான காரியமல்ல.

இதற்கென மூன்று வழிகளில் நாம் செயற்பட முடியும்

- தனிப்பட்டரீதியான தலையீடு.
- குடும்ப அமைப்பினுள் செய்யப்படும் தலையீடு.
- சமூக அடிப்படையிலான தலையீடு.

தனிப்பட்டரீதியான தலையீடு

சுகாதார சேவையாளராக எமது கடமையாகிறது. இம்சைகள் காணப்படும் தம்பதியர் அல்லது குடும்பங்களை அடையாளம் கண்டு அதனைக் குறைப்பதற்கோ தவிர்ப்பதற்கோ எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இமசை செய்பவரது அப்படியான நடத்தைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். இதற்கென கீழே கூறப்படும் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. இம்சைகள் உள்ளன என அடையாளம் காணல்
2. பிரச்சினையை விளங்கிக் கொள்ளல்
3. தலையிடல்
4. பின்விபரம் பெறல்

இம்சைகள் உள்ளன என அடையாளம் காணல்

சகல சுகாதார சேவையாளரும் தமது சேவைக்குட்பட்ட பகுதியில் வாழும் குடும்பங்கள் பற்றிக் கண்காணித்தல், தேடியறிதல், மற்றும் தகவல் திரட்டுதல் மூலம் வீட்டு வன்முறைக்கு உள்ளான குடும்பம் / தனிநபர்கள் உள்ளனரா எனத் தேடியறிதல் வேண்டும்.

பிரச்சினையை விளங்கிக் கொள்ளல்

I. கலந்துரையாடல்:-

- தனது தனித்துவம் / அந்தரங்கம் பாதுகாக்கப்படும் என உணரும் பொழுதும், அதற்கான பொருத்தமான சூழல் / பின்புலம் காணப்படுவதாக உணரும் பொழுதும் மட்டுமே, ஒருவர் தனது தனிப்பட்ட தகவல்கள், தொடர்பான பிரசசினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்குத் தூண்டப்படுவர்.
- ஆகையால் சேவை பெறுநர், தனது தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதற்கு முடியுமான முறையில் சூழலைத் தயார்செய்ய வேண்டும். அந்தச் சூழல் சத்தமில்லாத, மக்கள் அலைந்து திரியாத, எட்டிப் பார்க்க முடியாத பிரத்தியேகமான இடமாயிருத்தல் வேண்டும்.
- சுருக்கமாகப் பதிலளிக்க முடியாத கேள்விகளைக் கொண்டு சேவை பெறுநரைக் கலந்துரையாடலுக்குள் கொண்டு வரவும்.

II. கவனமாகச் செவிமடுத்தல்:-

- சேவை பெறுநரால் முன்வைக்கப்படும் தகவல் தொடர்பாகக் கவனம் செலுத்தும் திறமை உங்களுக்குள் இருத்தல் அவசியம். சேவை பெறுநர் பற்றிய பூரண கவனம் எடுத்தல் மற்றும் இந்தக் கவனம் உண்மையானது என சேவை பெறுநர் உணரும் வண்ணம் அது இடம்பெறுதல் வேண்டும்.
- சேவை பெறுநர் வாயால் மொழியும் வசனங்களுக்கு மேலதிகமாக சொல்லப்படாத உணர்வுகள், கருத்துக்கள், (குரல், முகபாவங்கள் மற்றும் உடல் அசைவுகள் தோற்றம்) ஆகியவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.
- அதிகமான சேவை பெறுநர்களுக்கு தமது பிரச்சினைகளை ஒரே தடவையில், ஒரே மூச்சில் வெளிப்படுத்த முடியாது. அவர்கள் சுற்றி வளைத்து, பல விபரங்களூடாக, உணர்ச்சிகள் உடல் அசைவுகள் மூலம் வெளிப்படுத்துபவைகளைக் கொண்டு, பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு உங்களுக்குத் திறமை இருக்க வேண்டும்.

- சொற்கள் மற்றும் சொற்கள் அல்லாத வழிகளில் முயற்சித்தல் மூலம் விடயத்தை வெளிப்படுத்துவதற்கு சேவை பெறுநரை ஊக்குவித்தல். சேவை பெறுநர் சொன்னவற்றை மீண்டும் ஒருதடவை சொல்லுதல், அல்லது வேறு வசனங்களில் சொல்லுதல் மூலம் சொன்னவைகள் அவைகளே என உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.
- மெதுவான குரலைப் பாவித்து நட்புடன் கேள்விகள் கேட்பதன் மூலம் சேவை பெறுநருக்கு தனது கருத்துக்களை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் தயக்கமின்றி முன்வைப்பதற்குத் தயார் செய்தல்.
- தொடர்ந்து அதிகமான கேள்விகள் கேட்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல். ஆம் / இல்லை எனப் பதிலளிக்கும் கேள்விகளைவிட தனது கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய கேள்விகளை முன்வைத்தல்.

செய்ய வேண்டியவை

- சேவை பெறுநர் குறித்து முன்னரான கணிப்பின்றித் தொழிற்படல்
- ஒவ்வொரு தனிநபரும் விஷேட குணங்களைக் கொண்டவர் எனப் புரிந்து கொண்டு தொழிற்படல்
- தனித்துவம் / அந்தரங்கம் பாதுகாக்கப்படல்
- சேவை பெறுநரது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குள்ள உரிமையை மதித்தல்.
- சேவை பெறுநருக்குத் தீர்மானம் எடுப்பதற்குள்ள உரிமையை மதித்தல்.
- எந்தத் தராதரம், எந்த உயர் மட்டம், சமூக மட்டத்தைச் சார்ந்த சேவை பெறுநராய் இருப்பினும் கௌரவமளித்தல், மரியாதையுடனும் சமமாகவும் நடாத்துதல்.
- தொழில் தொடர்பினை மட்டும் பேணுதல்
- சேவை பெறுநருக்கு தனது தகவல்களை சுதந்திரமாக வெளிப்படுத்தத் தேவையான அளவு இடமளித்தல்

தலையிடல்

குடும்ப நல உத்தியோகத்தரின் கடமைகள் :-

இம்சைக்கு ஆளான பெண்களை அடையாளம் காண்பதற்கு மிகவும் பொருத்தமான நபர், குடும்ப நல உத்தியோகத்தராகும். ஏனென்றால் அவர் ஊர் மக்களது விசேடமாகப் பெண்களது நம்பிக்கையை வெற்றிகொண்டிருப்பதனால், தங்களது சொந்த விடயங்களைக் கூட அவருடன் வெளிப்படுத்திக் கூறுவதற்குத் தயங்க மாட்டார்கள். இருந்தும் அவர்கள் இப்படித் தமது தகவல்களை வெளிப்படுத்துவதற்குத் தூண்டப்படுவது, அதன் மூலம தங்களுக்கு நன்மை ஏற்படும் என்ற உணர்வு இருந்தால் மாத்திரமே. ஆகையால் இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொண்டு உம்மால் முடியுமான வகையில் அவருக்கு உதவி புரிவதற்கு முயற்சிக்க வேண்டும்.

வீட்டுத் தரிசிப்புக்களின்போது, களப்பயணங்களின் போது மற்றும் கிளினிக்குகளில் (பிணியாய்வு நிலையாகலில்)

- இம்சைக்கு ஆளான பெண்களை அடையாளம் காண்பதற்கு ஈடுபாடு காட்டுதல்.
- இப்படி அடையாளம் காணப்பட்ட தம்பதியருடன் கலந்தாலோசித்து, அவர்களுக்குச் செவிமடுத்து, பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு முயற்சித்தல்.
- உண்மையில் அவர்களுக்குக் செவிமடுத்தல் மாத்திரமே, ஒருசில தம்பதியருக்கு ஆறுதலாய் அமைந்து விடுகிறது.

- அதன் பின்னர் இப்படியான தம்பதியரிடையே கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கு உதவி செய்தல். தம்பதியரிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தல். தேவையேற்படின் இதற்கென பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரத் தாதிய சகோதரி ஆகியோரது உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- தங்களால் தீர்த்து வைக்க முடியாத பிரச்சினைகள் எனில், அதற்கென சுகாதார வைத்திய அதிகாரியின் உதவி தேவை எனக் கருதினால் அப்படியான தம்பதியரை சுகாதார வைத்திய அதிகாரியிடம் அனுப்பி வைத்தல்.
- இதற்கென செலவுகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய தமது பிரதேசத்தில் அல்லது அயலில் உள்ள சேவை வழங்கும் வளவாளர் வலையமைப்புக்களை அடையாளம் காணுதல். உதா :- அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள்
- விசேட தேவைகள் உள்ள தம்பதியர் அவர்களது விருப்பத்தின்படி பொருத்தமான சேவைகளை நோக்கி அனுப்பப்படல்.
- பின்விபரம் பெறல்.

இம்சைக்கு ஆளானவர்களுக்கெனச் செய்யக்கூடிய தலையீடுகள்

- அவர்கள் தனியாக இல்லையெனவும் இது போன்ற பிரச்சனைகள் உள்ள பலர் உள்ளனர் எனவும் கூறி அவன் / அவளை ஆறுதல்படுத்த முயற்சித்தல்.
- முடியுமானால் அவன் / அவளுடன் கலந்துரையாடி அவன் / அவளுக்கு உதவியளிக்க முயற்சித்தல்.
- அவன் / அவள் இந்த நிலைமையைத் தாங்கிக் கொள்வது எவ்வாறு என விசாரித்தல், இது சம்பந்தமாக அவன் / அவளது எதிர்கால எதிர்பார்ப்புக்களை விசாரித்தல்.
- அவர்களது குடும்ப வாழ்வில் பிரச்சினைகள் இருப்பின் அல்லது உளரீதியான பிரச்சினைகள் இருப்பின் பொருத்தமான ஆலோசனை சேவைக்கென, அவர்களது விருப்பத்தின்படி அனுப்பி வைத்தல்.
- அவர்களுக்குள் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தல். இதற்காக அவன் / அவளிடம் இருந்தே யோசனைகளை முன்வைக்கச் செய்தல். இறுதியாக தமக்கு மிகவும் பொருத்தமான தீர்வினைத் தேர்ந்தெடுப்பதற்கு அவன் / அவளுக்கு உதவியளித்தல்.
- சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமாகவேனும் பிரிவதுதான் அவர்களது பிரச்சினைக்கான பொருத்தமான அல்லது இறுதியான முடிவென அவர்கள் தீர்மானிக்கும் பட்சத்தில் கீழ்க்காணப்படும் விடயங்கள் பற்றி அவர்களுடன் கலந்தாலோசனை செய்தல்.
    - பொருளாதாரம்
    - வீடு
    - சட்ட நிலவரம்
    - குழந்தைகளைப் பராமரித்தல்
    - அவன் / அவளது பாதுகாப்பு

- அவர்களுக்கு அவசியமான சேவைகளுக்கென அவர்களை அனுப்பி வைத்தல்
- தொடர் கண்காணிப்பு இடம்பெறல்.

இம்சை செய்பவர்களுக்கெனச் செய்யக்கூடிய தலையீடுகள்

- இம்சை செய்பவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களுக்குக் காது கொடுத்தல். தேவையேற்படின் இதற்கென பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரத் தாதிய சகோதரி ஆகியோரது உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- அவர்களுக்கு அவசியமான சேவைகளுக்கென அவர்களை அனுப்பி வைத்தல்
    - ஆலோசனை சேவை
    - கோபம்/ஆவேசத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய திறமையைப் பெற்றுக் கொடுத்தல்.
    - பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய திறமையைப் பெற்றுக் கொடுத்தல்.
    - தீர்மானம் எடுப்பதற்கு வேண்டிய திறமையைப் பெற்றுக் கொடுத்தல்.
    - மதுபானம் அருந்துபவராயின் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய திறமையைப் பெற்றுக் கொடுத்தல்.
    - புனர்வாழ்வளித்தல
- உளஆரோக்கியத்தில் குறைவு ஏதும் காணப்படுமாயின் அவர்களுக்கு அவசியமான சேவைகளுக்கென அவர்களை அனுப்பி வைத்தல்
    - ஆலோசனை சேவை
    - வைத்திய அதிகாரிகளிடம் - மனோவைத்தியக் கிளினிக் நடத்துபவர்கள்

முடியுமானவரை குடும்பத்தைப் பிரியவிடாது சமாதானப்படுத்துதலே எமது குறிக்கோள் என்பதனைப் புரிந்து கொள்ளவும்

பொதுச் சுகாதாரப் பரிசோதகரது கடமைகள்

- வெளிக்களப்பயணங்களின் போது இம்சை இடம்பெறும் தம்பதியர் / குடும்பங்களை அடையாளம் காணுதல்.
- அவர்களது பிரச்சினைகளை அடையாளம் கண்டு அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து இம்சையைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு உதவுதல்.
- விசேடமாக ஆண் பகுதியினருடன் கலந்துரையாடி அவர்களுடைய பிரச்சனைகறளுக்கு தீவிரமாக செவிமடுத்து, அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவுதல்.
- தங்களது பிரதேசத்தில் காணப்படும் இதற்கெனச் செயற்படும் வளவாளர் வலையமைப்புக்களை அடையாளம் கண்டு, இம்சை செய்பவர்களது விருப்பத்தின்படி பொருத்தமான சேவைக்கென அனுப்பி வைத்தல்.
- விஷேடமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் அடையாளம் காணப்பட்ட இம்சை இடம்பெறும் தம்பதியர் / குடும்பங்களின் ஆண் பகுதியினருடன் கலந்துரையாடி அவர்களுக்குத் தீவிரமாகச் செவிமடுத்து, அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவுதல்.
- மதுபானம், போதை வஸ்துகளுக்கு அடிமையான ஆண்களுடன் கலந்துரையாடி அதன் மோசமான விளைவுகள் குறித்துத் தெளிவுபடுத்தி அவர்களைச் சிறந்த வழிக்குக் கொண்டுவர முயற்சி எடுத்தல். முன்னர் மதுபானம், போதை வஸ்துகளுக்கு அடிமையாகி இருந்து, பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்ட ஆண்கள் தற்போது மதுபானம், போதைவஸ்துகளுக்கு அடிமையான ஆண்களுடன் கலந்துரையாடுவதற்குப் வழிவகுத்தல், வெற்றிகரமான முறையாகும்.
- புனர்வாழ்வு அவசியமானவர்களை அதற்கென அனுப்பி வைத்தல்.
- இதற்கு மேலதிகமாக குடும்ப நல உத்தியோகத்தருக்கென்று மேலே குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களையும் பின்பற்றுதல்.
- தொடர் கண்காணிப்பு இடம்பெறல்.

பொதுச் சுகாதாரத் தாதிய சகோதரியினது கடமைகள்:-

- குடும்ப நல உத்தியோகத்தரினால் அனுப்பப்படும் தம்பதியர் / குடும்பங்களில் இம்சையைத் தவிர்ப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்ட முறைப்படி செயற்படுதல்.

சுகாதார வைத்திய அதிகாரியின் கடமைகள்:-

- தங்களது பிரதேசத்தில் இப்படியான இம்சைக்கு ஆளான குடும்பம் பற்றிய தகவல்களைப் பெறுதல், அதற்கான தலையீட்டாளராய்த் தொழிற்படல் மற்றும் அவர்களுக்கு உரிய வழிகாட்டல் முதலியவற்றைச் செய்தல்.
- குடும்ப நல உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரத் தாதிய சகோதரி ஆகியோரினால் அனுப்பப்படும் தம்பதியர் / குடும்பங்களில் இம்சையைத் தவிர்ப்பதற்கென அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- வீட்டு வன்முறையைத் தவிர்ப்பது சம்பந்தமாகச் செயற்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைப்பாளராய்த் தொழிற்படல்.
- வீட்டு வன்முறையைத் தவிர்ப்பது சம்பந்தமாகக் காணப்படும் புதிய சட்டதிட்டங்கள் பற்றி சுகாதார சேவையாளர்களை அறிவூட்டல்.
- மக்கள் வலுவூட்டல் பற்றிய கூட்டங்கள், மற்றும் மாநாடுகள் பாடசாலை மட்டங்களில் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அதில் பங்கேற்று அவர்களுக்கு வழிகாட்டுதல்.
- பலவிதமான மதுபானம், போதைப் பொருள் அடிமைத்தனம் மற்றும் HIV / AIDS ஏற்படக் கூடிய ஆபத்தான குழுக்களுக்கான அறிவூட்டல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல்.
- தமது சுகாதார ஆளணியினருக்கு இதற்கு அவசியமான வளங்களை விநியோகித்தல்.

குடும்பக் கட்டமைப்பினுள் செய்யப்படும் தலையீடு

குடும்ப நல உத்தியோகத்தரின் கடமைகள் :-

- கிளினிக் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும்போது கணவன் மனைவி இருவரையும் அதற்கென அனுப்பி வைத்தல்.
- கிளினிக்கினுள் இடம்பெறும் சுகாதாரக்கல்வி அமர்வுகளில் கணவன்/மனைவி இருவரையும் பங்கு பெறச் செய்தல். சுகாதாரக்கல்வி ஊடாக அவர்களுக்குள் சிறந்த சிந்தனைகளையும் மனப்பாங்கினையும் உருவாக்க முயற்சித்தல்.
- ஒருவரையொருவர் மதிப்பதற்கும், ஒவ்வொருவரது கடமைகளை மதிப்பதற்கும் மற்றும் சம்பிரதாயபூர்வமான விதிப்படி, பெண் ஆண் எனக் கடமைகளைப் பிரித்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் சிறுபராயம் இருந்தே பழக்கப்படுத்த வேண்டும் எனக் குடும்பங்களுக்குப் புரிந்துணர்வூட்டல் வேண்டும். வீட்டுத் தரிசிப்புக்களில்/ வெளிக்களத்தில் நீங்கள் பெறும் அனுபவங்கள் மற்றும் அவதானிப்புக்களைப் பயன்படுத்தி குடும்பங்களுக்கு (விசேடமாக பெண்களுக்கு) இந்தச் செய்தியினைப் பெற்றுக் கொடுக்க முடியும்.
- குடும்பத்தினுள் ஆண் பங்களிப்பினைக் காணும்போது பாராட்டுதல், எப்பொழுதும் அதனைப் பாராட்ட வேண்டும் எனப் பெண்களுக்கும் புரியவைத்தல்.
- அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று பெண்களுக்குப் பல்வேறு வகையான தொழிற்துறைகளில் பயிற்சியும், திறமையும், நிதி வசதியும் பெற்றுக் கொடுத்தல். கைக்கொள்ள வேண்டிய வழிகளைக் காட்டிக் கொடுத்து அவர்களது பொருளாதாரத்தையும் மற்றும் சுதந்திரத்தையும் (சுயாதீனத் தன்மை) பாதுகாப்பதற்கு உதவியளித்தல்.

- மேற்குறிப்பிட்ட இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்போதும், வீட்டு வன்முறைகளைத் தவிர்ப்பதற்குத் தலையிடும்போதும் தம்பதியருடன் கலந்துரையாடி குடும்பத்தின் அபிவிருத்திக்கு/ சந்தோசத்துக்கு/ சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு நட்புறவுடன் செயற்படல், இருவரிடமிருந்தும் பெற்றுக் கொண்ட தகவல்களின் இரகசியத் தன்மையைப் பேணல் ஆகியன மிகவும் முக்கியமானவையாகும்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரது கடமைகள்

- வெளிக்களப்பயணங்களின் போது குடும்பத்தினுள் வீட்டு வேலைகளுக்கென ஆண்களின் பங்களிப்பினை உருவாக்குவதற்கு ஈடுபாடு காட்டுதல்.
- குடும்பத்தினுள் ஆண் பங்களிப்பினைக் காணும் ஒவ்வொரு வேளையிலும் அதனைப் பாராட்டுதல்.
- குடும்ப நல உத்தியோகத்தருக்கு உதவி அவசியப்படின் உதவி செய்தல்.

பொதுச் சுகாதாரத் தாதிய சகோதரியினது கடமைகள்:-

- குடும்ப நல உத்தியோகத்தர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரது கடமைகளுக்கு உதவி அவசியப்படின் உதவி செய்தல்.

சமூக அடிப்படையிலான தலையீடு

அதிகமான வேளைகளில் சமூக அடிப்படையிலான வேலைத் திட்டங்கள் ஒரு குழுவாகவே செய்யப்பட வேண்டும்.

பொதுச் சுகாதார ஆளணியினரால் செய்யக்கூடிய சமூக அடிப்படையிலான தலையீடுகள்:-

- நீண்ட காலப் பலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக, தலையீடு இடம்பெற வேண்டிய மிகப் பொருத்தமான குழுக்கள் பாடசாலை மற்றும் முன் பாடசாலைப் பிள்ளைகளாகும். அதன் மூலம் நீண்ட காலப் பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாயிருப்பதோடு, எமது குறிக்கோளையும் நெருங்குவதற்கும் இலகுவானது. தங்களது குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் அந்தச் செய்திகளை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்கு அவர்களைப் பாவிக்க முடியும். பாடசாலைச் சுகாதார வேலைத் திட்டம் இந்த மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மிகப்பெரிய சந்தர்ப்பமாகும். இங்கே பாடசாலைச் சிறார்களை அறிவூட்ட நடவடிக்கை எடுத்தல், பெண் ஆண் சமூக நிலையை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரியமான பிழையான கருத்துக்கள் மற்றும் மனப்பாங்குகள் இம்சையெனக் காட்டப்படும் முறையினை எடுத்துக் காட்டி அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொடுக்க முயற்சித்தல். மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் கெட்ட விளைவுகளைக் காட்டித் தந்து, அப்படியான கூடாத நடத்தைகளிலிருந்து மாணவர்களை விடுவிப்பதற்கும் மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

- பாடசலை ஆசிரியர்/ ஆசிரியைகளுக்கான அறிவூட்டல் செய்வதன் மூலம் பாடசாலை மாணவ மாணவியருக்கு வீட்டு வன்முறையில்லாத குடும்பத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றிய புரிந்துணர்வூட்டல்.

- முன் பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலே கூறப்பட்ட விடயங்களில் அறிவூட்டல் செய்வதற்கு பயற்சிப் பட்டறை ஒழுங்கு செய்தல். அதன் மூலம் முன் பாடசாலைப் பிள்ளைகளுக்குள் வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்தல், ஒருவருக்கொருவர் அனுசரித்தல், மதிப்பளித்தல் போன்ற குணங்களை விருத்தி செய்ய முடியும்.

- இளைஞர் யுவதிகளையும் திருமணம் முடிப்பதற்கு இருப்பவர்களையும் ஒன்று கூட்டி அவர்களை அறிவூட்டல், வீட்டு வன்முறையின் விளைவுகள் மற்றும் வீட்டு வன்முறை இல்லாமையினால் கிடைக்கும் நன்மைகள் பற்றித் தெளிவூட்டல்.

- முதியோர் மற்றும் இளைஞர் யுவதியர்களுக்கென கூட்டங்களை ஒழுங்கு செய்தல். வேலைத் தலம், மக்கள் மண்டபங்கள், பொதுக் கிளினிக்குகள் போன்றலற்றை இதற்கெனப் பயன்படுத்தலாம். சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உட்பட முழு பொதுச் சுகாதார சேவை வழங்கும் ஆளணியினரையும் இதில் பங்குபெறச் செய்வதன் மூலம் இந்தக் கூட்டத்தினை வெற்றிகரமானதாக மாற்றலாம்.

வளங்களின் வலையமைப்பை அடையாளங் காணுதலும், இணைத்தலும்

இம்சைகளைத் தவிர்ப்பதற்கெனச் செயற்படும் எம்மைச் சுற்றியுள்ள வளங்களின் வலையமைப்பை அடையாளங் காணுதலும் அவர்களுடன் தொடர்புபடுதலும் மிகவும் முக்கியமானவை.

மாவட்ட, பிரதேச, மற்றும் கிராமிய மட்டத்தில் இதற்கெனச் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் அதிக அளவில் இருக்க முடியும். அவர்கள் பற்றியும் மற்றும் அவர்கள் வழங்கும் சேவைகள் பற்றியும் அறிந்து கொள்வதன் மூலம் இம்சைக்கு ஆளானோர் மற்றும் இம்சைகளைச் செய்வோர் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கென அனுப்பப்படுதல் இலகுவாயமையும்.

அப்படியான சேவைகள் சில கீழே குறிப்பிடப்படுகின்றன:-
சகல பிரதேச செயலாளர் காரியாலயங்களிலும் அதற்குரிய பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளனர். அதுபோன்று சகல பிரதேச செயலாளர் காரியாலயங்களுக்குமான ஆலோசகரும் உள்ளார். சேவை பெறுநரை ஆலோசனைக்கென அவரிடம் அனுப்பப்பட முடியும்.

அதற்கு மேலாக அரச நிறுவனங்களுக்கான நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் உட்பட்ட அதிகாரிகளது உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். அதுபோன்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவி அவசியப்படுமிடத்து அவர்களையும் அழைக்க முடியும். பெண்கள் பணியகத்தின் மூலம் சில மாவட்டங்களிலும் சில பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பெண்கள் வலுவூட்டலுக்கென பல்வேறு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இது பற்றியும் அறிந்திருத்தல் மூலம் இப்படியான சேவைகள் அவசியப்பட்ட பெண்கள் அதற்கென அனுப்பப்பட முடியும்.

உதாரணம் :- பெண்கள் சங்கங்கள் ஏற்படுத்தல்.

சுய வேலை வாய்ப்பு (Self employment) சுயஉதவி (Self help & self support group) கடன் சங்கங்கள் அமைப்பதற்கு உதவியளித்தல்.

இதற்கு மேலதிகமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அவர்களால் வழங்கப்படும் சேவைகள் பற்றியும் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

நாங்கள் எப்பொழுதும் சம்பிரதாயபூர்வமாகப் பேணப்படும் தந்தையை அடிப்படையாகவும், தாயை மையமாகவும் கொண்ட சமூக முறையினைப் பாதுகாப்பதற்கும் பெண்கள் இம்சையை இல்லாதொழிப்பதற்கும் தைரியமாய் முயல வேண்டும்

WITH THE GIFT OF LISTENING COMES THE GIFT OF HEALING, BECAUSE LISTENING TO YOUR BROTHERS AND SISTERS UNTIL THEY HAVE SAID THE LAST WORDS IN THEIR HEARTS IS HEALING AND CONSOLING. SOMEONE ONCE SAID THAT IT IS POSSIBLE" TO LISTEN A PERSON'S SOUL INTO EXISTENCE".

Catherine de Hueck Doherty

ஒருவருக்குக் காதுகொடுக்கக்கூடிய வரம் பெற்ற ஒருவர் இன்னுமொருவரைச் சுகப்படுத்தும் அளவு ஆசீர்வாதம் பெற்றவராகிறார்.

ஏனென்றால் அவர் தனது சகோதர சகோதரிகளது இதயங்களின் அழுத்தும் உணர்வுகள் வசனங்களாக மாறும் போது கடைசி வசனம் வரை அவற்றிற்குக் காது கொடுத்தல் அந்த சகோதர சகோதரிகளுக்கு சுகமானது, ஆறுதலானது.

''ஒருவர் குறிப்பிட்டார் காது கொடுக்கும் ஒருவரிடம் மனிதன் தனது முழு ஆத்மாவினையும் விவரிக்கின்றான் என்று. அதாவது காது கொடுப்பவர் அந்த மனிதனது முழு ஆத்மாவையும் வாழ வைக்கின்றார் என்று''

මෙම ප්‍රකාශනය සඳහා, යුරෝපා සංගමය (EU) මගින් මූල්‍යමය ආධාර සපයන ලදී.
මෙම ප්‍රකාශනයේ අන්තර්ගත කරුණු පිළිබඳ සම්පූර්ණ වගකීම පවුල් සෞඛ්‍ය කාර්යංශය සතුය.
මෙම ග්‍රන්ථයෙහි සඳහන් වන කිසිදු අදහසක් යුරෝපා සංගමයේ අදහස් හෝ අරමුණු සමග
කිසිදු බැඳීමක් නොමැති බව සඳහන් කරුමු.

இந்த கைநூல் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் அச்சிடப்பட்டது.
இதில் அடங்கிய விபரங்கள் யாவும் குடும்ப சுகாதார பணியகத்தின் பொறுப்பாகும் எநத
விதத்லும் இதில் உள்ள விபரங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிபலிப்பு இல்லை.

This document has been produced with the financial assistance of the European Union.
The contents of this document are the sole responsibility of Family Health Bureau and under no
circumstances be regarded as reflecting the position of European Union.